Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT
R A M C O
SLS 107
(O.P.C)
(C/790)

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 09 திங்கட்கிழமை (25.07.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 299




சிறையில் இருந்து புலனாய்வு

08



அடம்பனில் ஒரு பசுமைப் புரட்சி

12



எங்களுக்கு நல்ல அனுபவம்

06



காரைநகர் புண்ணிய பூமி

04

# தட்டியெழுப்பப்படும் இனவாதம் மக்கள் விழிப்படைய வேண்டும்



## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

தேர்தல் வெற்றியை மட்டும் இலக்காகக் கொண்டு தமிழ் மக்களின் மனங்களில் இனவாத உணர்வுகள் மீண்டும் தட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த இனவாதச் சகதிக்குள் தமிழ் மக்களின் வளமான வாழ்வு சிக்க வைக்கப்பட்டிருக்கிறது.

இதன்மூலம் தேர்தலில் வெற்றி வாய்ப்புக்கள் சாத்திய மாகலாம். ஆனால், தமிழ்மக்களின் வளமான எதிர்காலம் இருண்ட யுகத்துக்குள் மீண்டும் இழுத்துச் செல்லப்படும் அபாயத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு மக்கள் அனைவரும் விழிப்படைய வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தொடர்பாக செய்தியாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை அமைச்சரின் யாழ்.அலவலகத்தில் இடம்பெற்ற இச்செய்தியாளர் சந்திப்பின் போது அமைச்சர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்;

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாங்கள் 3 உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றியிருக்கின்றோம். அத்துடன், 2 உள்ளூராட்சி சபைகளில் மிகச் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றத் தவறியிருக்கின்றோம். எங்களிடம் தங்களுடைய உள்ளூராட்சி அதிகாரத்தைக் கையளித்த மக்களுக்கு முதலில் எனதும் எனது வேட்பாளர்களினதும் நன்றிகளைத

(15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் தேர்தல் வன்முறை யதார்த்தத்துக்கு மாறான குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

எமது கட்சியினர் தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டிருப்பதாக எதிர்த் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் முழுக்க முழுக்க யதார்த்தத்துக்கு புறம் பானது. இதனைத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியிருக்கின்றது என நேற்றைய ஊடகவியலாளர் மாகாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவரது கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதன்போது தீவுப்பகுதிகளிலும் ஏனைய கட்சியினர் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட முடியாத நிலை காணப்பட்டதான குற்றச்சாட்டையும் அமைச்சர் மறுத்தார்.

அத்துடன், கூட்டமைப்பினர் தீவுப்பகுதிகளில் தமது பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டனர். அவர்களில் வேட்பாளர்கள் குடும்பத்தினருடன் சென்று வாக்குக் கேட்டிருக்கின்றனர். அவ்வாறு அவர்கள் மக்களிடம் கொடுத்துச் சென்றிருந்த துண்டுப் பிரசுரத்தில் நேரில் வர முடியாமைக்கு வருந்துகிறோம் எனவும் எழுதிக் கொடுக்கப்பட்டி ருந்தது. ஆனாலும், தீவுப்பகுதிகளில் அவர்களது பிரசாரம் எடுபடவில்லை. எனப் பதிலளித்த அமைச்சர், தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறிப்பிட்ட காலம் பொய்களைப் புனைந்து வந்திருக்கின்றது எனத் தெரிவித்தார்.

இவர்கள் கடந்த கால கசப்பான சம்பவங்களை நினைவு

(16ஆம் பக்கம் பார்க்க)


## வடக்கின் தேர்தல் முடிவு உறைக்கும் செய்தி அரசுக்கு

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமோக வெற்றி பெறச் செய்ததன் மூலம் தமிழ் மக்கள் இலங்கை அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் தெளிவான செய்தியை உரத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று அக்கட்சி நேற்று விடுத்துள்ள ஊடாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இணைச் செயலாளரும், உத்தியோகபூர்வ பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ பிரேமச்சந்திரனால் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச சமூகமும் இலங்கை அரசு போர்க்குற்றங்களை இழைத்திருக்கிறது எனவும், இது தொடர்பாக நீதியான விசாரணை தேவை எனவும் வற்புறுத்தி வரும் மிக முக்கியமான காலகட்டத்திலேயே இத்



தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. சர்வதேச சமூகம் கொடுத்து வரும் இந்நெருக்கடிகளில் இருந்து தப்புவதற்காக அரசு உள்ளூராட்சித் தேர்தல்களில் வென்று

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் மீது ஐ.தே.க.சாடல்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் சுதந்திரமாக நடைபெறவில்லையென ஐ.தே.கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

தேசிய ஊடகம் மட்டுமல்ல தேசிய வளங்கள் மற்றும் சில தேசியநிறுவனங்கள் கூட அரசின் தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன் படுத்தப்பட்டதாக ஐ.தே.க. குற்றம் சுமத்தியுள்ளது.

## ஊடகவியலாளர் மீது தாக்குதல்

(கிரிபத்கொட)

கிரிபத்கொட நகரில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற நியூஸ்பெஸ்ட் ஊடகவியலாளர் குழு மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிரிபத்கொட நகரில் வர்த்தக சந்தைக்கு பதிலாக நிர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகத்திற்கு வெற்றி

(கொழும்பு)

ஒழுக்கம் மற்றும் ஜனநாயக ரீதியிலான தேர்தல் வெற்றியை அரசாங்கம் உலகத்திற்கு எடுத்துக் காட்டியுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிடுகின்றார்.

ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து மக்கள் தொடர்ந்தும் நம்பிக்கை வைத்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டுகின்றார்.

## கூட்டமைப்பு உறுப்பினர்கள் பதவியேற்பு கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக தெரிவுசெய்யப்பட்ட தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இந்நிகழ்வு ஓகஸ்ட் முதல் வாரத்தில் நடைபெறும் என அவர் குறிப்பிட்டார்.

இதன்போது அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்ட உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் திருகோணமலையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஊர்வலங்களுக்குத் தடை

(கொழும்பு)

நேற்று முதல் ஒருவார காலத்திற்கு ஊர்வலங்கள் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமன பிரிஷாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பேரணிகள் வாகன ஊர்வலங்கள் என்பவற்றிற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். தேர்தல் நடைபெற்ற நேற்றைய தினத்தில் அமைதியான சூழ்நிலை நிலவியதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு வங்கிக் கொள்ளை ஒரே குடும்ப உறுப்பினர்கள் கைது



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த யூன் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற 175 மில்லியன் ரூபாவைக் கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட நபர் ஒருவரும் அவரது இரு மகன்களும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் 160 மில்லியன் ரூபா பணமும் 15 மில்லியன் ரூபா பெறுமதியான நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன. இதே குடும்பத்தைச் சேர்ந்த தாய் மற்றும் மகள் ஆகியோரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக காவற்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட முக்கிய சந்தேக நபர் யூலை 20 ஆம் திகதியன்று வென்னப்புவவில் அமைந்துள்ள பாதுகாப்பான வீடொன்றிலிருந்த வேளையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸார் ஆகியோரைக் கொண்ட குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மட்டக்களப்பு புகையிரத நிலையத்திற்கு அருகில் காவற் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸ் உறுப்பினரிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட ரி-56 ரகத் துப்பாக்கியும், கொள்ளையடிக்கப்பட்ட ஒரு தொகுதி நகைகளும் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

வங்கிக் கொள்ளையில் ஈடுபட்ட ஏனையோர் விளையாட்டுத் துப்பாக்கியைப் பயன்படுத்தினர்.

வங்கிக் கொள்ளையுடன் தொடர்புபட்ட மற்றைய இரு சகோதரர்களையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

## கொடியேற்றம்

(புத்தளம்)

புத்தளம் உடப்பு திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 3 ஆம் திகதி சுயம் வர கொண்டாட்டமும், 7 ஆம் திகதி வனவாசக் காட்சியும், 8 ஆம் திகதி அருச்சுனன் தவ நிலையும், 10 ஆம் திகதி தீ மிதிப்பு வைபவமும் நடைபெறவுள்ளன.

## வீதி விபத்தில் இளைஞன் படுகாயம்

(அராலி)

அராலி வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆர்.அகிலேஸ்வரன் (வயது 21) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிள் முன்சில்லு காற்றுப் போனதன் காரணமாக இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் முகத்தில் படுகாயமடைந்ததுடன், பற்கள் உடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (எஸ்)

## முல்லைத்தீவில் தொழிற்பயிற்சி

(மாதகல்)

இயநதிரம் திருத்துதல், பராமரித்தல் பயிற்சி நெறிகள் யாழ். கடற்தொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியால் முல்லைத்தீவில் நடத்தப்படவிருப்பதாக உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

கொழும்பு தேசிய கடற்தொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி F.A.O, உலக உணவு நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படும் பயிற்சிநெறிகள் இம்மாதம் 27, 28 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே பயிற்சிநெறிகளை கடந்த 20, 21 ஆம் திகதிகளில் மன்னாரில், கல்லூரியால் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (68)



குருநகர் யாகப்பர் ஆலயத்தின் வருடாந்த பெருவிழாவின் முதல் நாளான நேற்றைய தினம் இடம்பெற்ற நற்கருணை பெருவிழா வழிபாட்டில் இடம்பெற்ற பவனியையும், நற்கருணை ஆண்டவரால் மக்களுக்கு ஆசீர் வழங்குவதையும் காணலாம். (52)

## “போர்க்களம்” தென்மோடி நாட்டுக்கூத்து

(குருநகர்)

குருநகர், புனித யாகப்பர் தேவாலய 150 ஆவது ஜுபிலி விழாவை சிறப்பிக்கும் விதமாக யாகப்பர் கலை மன்றம் ‘போர்க்களம்’ தென்மோடி நாட்டுக்கூத்தை பெருமையுடன் மேடையேற்றவுள்ளது.

பழம்பெரும் கலைஞர் தம்பித்துரை பிலிப் நெறியாள்கையில் 28 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு குருநகர் கலையரங்கில் இந்நாடகம் மேடையேற்றப்படும்.

பிரதம விருந்தினராக ஆலய பங்குத் தந்தை ஆர்.சி.எக்ஸ். நேசராசா அடிகள் மற்றும் சிறப்பு விருந்தினராக அருட்திரு யே. ஜெயசேகரம் அடிகளும் கலந்து கொள்வார். (68)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி மாசுவன் மீனாட்சியம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து பன்னிரு தினங்கள் காலையில் அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் திருவுலாவும் நடைபெறும். எதிர்வரும் ஆவணி 2 ஆம் திகதி செவ்வாய் ஆடிப்பூரத்தன்று இந் நிகழ்வு நிறைவுபெறும்.

## நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் மண்டலாபிஷேக பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையாருக்குக் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.சா.சோமதேவக் குருக்கள் தலைமையில் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சஹஸ்ர சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு விநாயகர் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு காலையில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மாலையில் திருவீதியுலாவும் இடம்பெறவுள்ளது.

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையாருக்குக் கடந்த 12 ஆம் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகிறது.

இதனை முன்னிட்டு காலையில் விநாயகருக்கும், பாலாம்பிகை சமேத வைத்தியநாதப் பெருமானுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும், அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் இருவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் முறக்கொட்டாஞ்சேனையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் சம்பவ இடத்தில் பலியானதுடன், நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## விளையாட்டு மைதானம் புனரமைப்புச் செய்யக் கோரிக்கை

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி - வன்னேரிக்குளம பிரதேசத்திலுள்ள வன்னொளி விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் இப்பிரதேசத்திலுள்ள விளையாட்டு வீரர்கள் இதனைப் பயன்படுத்த முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 1996 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்குப் பின்னர் மேற்படி மைதானத்தில் பெருமளவு விளையாட்டு வீரர்கள் போட்டிகளை நடத்தியிருந்தனர்.

பின்னர் இடம்பெற்ற யுத்த அனர்த்தத்திற்குப் பின்னர் இம்மைதானம் புற்கள் வளர்ந்து காடாக காணப்படுகிறது.

தற்போது இப்பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள சூழலில் விளையாட்டு வீரர்கள் மைதானம் இன்றி பாட்சாலை மைதானங்களையே பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மைதானம் புனரமைக்கப்பட்டால் போட்டிகள் நடத்துவதற்கு இலகுவாக அமையும் என இப்பிரதேசத்திலுள்ள பொது மக்களும் விளையாட்டு வீரர்களும் தெரிவிக்கின்றனர். (121)

## இளம் பெண்ணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கற்பிட்டி, தேவாலய வீதியிலுள்ள பற்றைக் காட்டில் 25 வயது மதிக்கத்தக இளம் பெண்ணின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்ள்ளது.

அழுகிய நிலையில் காணப்படும் குறித்த சடலம் சில நாட்களுக்கு முன்னர் இந்த இடத்தில் போடப்படுள்ளது என பொது மக்கள் தெரிவிக்கின்றனர். உயிரிழந்தவர் கற்பிட்டி பிரதேசத்தை சேர்ந்தவரல்ல எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சடலத்தை அடையாளம் காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கற்பிட்டி பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.


வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

பெயர்: நி.ஜதுஷனன்
முகவரி: கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்



Happy Birthday!

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .............................. பெற்றோர் கையொப்பம்

மேகங்கள் கரையும்வரை பொறுத்திருந்தால் தான் சூரிய ஒளியைப் பார்க்க இயலும் அதுபோல அறியாமை அகலும்வரையில் பொறுமையாகப் பிரார்த்தனை செய்தால்தான் இறையருள் கிடைக்கும்.

- பாபா -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## வட்டச் சுழல்

நடந்துமுடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பையே வடக்கு மக்கள் பெருமளவு ஆதரித்திருக்கிறார்கள். யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தமிழரசுக் கட்சி பெயரில் போட்டியிட்ட கூட்டமைப்பு 143,576 வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 58,037 வாக்குகளும், தமிழர் விடுதலைக் கூட்டணி 5477 வாக்குகளும் பெற்றுள்ளன. இதன்படி தமிழரசுக் கட்சிக்கு, அது போட்டியிட்ட 17 சபைகளிலுமாக 156 ஆசனங்கள் கிடைத்திருக்கிறது. ஐ.ம.சு.மு. 19 சபைகளிலும் போட்டியிட்டு 68 ஆசனங்களையும், பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய இரண்டு சபைகளில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி 12 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

உள்ளூராட்சி சபைகள் சட்டங்களை இயற்றுவதற்கோ அல்லது அரசியல் அதிகாரங்களைக் கொண்டிருப்பவையோ அல்ல. அவ்வப் பிரதேசங்களின் அபிவிருத்தியும், மக்கள் வாழ்வாதாரத்திற்கு வகை செய்தலுமே அவற்றின் பிரதானக் கடமைகள்.

அந்த வகையில் வடக்கில் பெரும்பான்மையான சபைகளைக் கைப்பற்றியிருக்கும் கூட்டமைப்பு, அவ்வப் பிரதேச மக்களின் வாழ்நிலையை உயர்த்தும் செயற்பாடுகளில் இனி முழுமூச்சாக இறங்கியாகவேண்டும். அரசு மீதான குற்றச்சாட்டுக்களையும் இன வெறுப்பையும் மக்களது அடிப்படைத் தேவைகளுக்குப் பதில்களாக இனிமேலும் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. உணர்ச்சிகரமான இன எதிர்ப்புப் பேச்சுக்களின் மூலமே சபைகளைப் பிடித்திருக்கும் கூட்டமைப்பு, அவற்றைச் செயற்பாடுகளின்றி வைத்திருப்பதற்கும் அந்தப் பேச்சுக்களையே கவசமாக்கிக் கொள்ளக்கூடாது என்பதுவே எமது எதிர்பார்ப்பு!

1977 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளில் முழங்கிய இனவாத எதிர்ப்பலையின் மூலம் நாட்டின் எதிர்க்கட்சியாகவே வருமளவுக்கு நாடாளுமன்ற ஆசனங்களைப் பெருமளவு பெற்றது போன்ற ஒரு நிலைமையையே இந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் நாம் காண முடிந்திருக்கிறது.

தங்களது தேர்தல் வெற்றிகளுக்காகத் தமிழ் இளைஞர்களிடையே மூட்டிவிட்ட இனவாதத் தீயே, பிறகு ஒரு திசைவழிச் செயற்படுத்த முடியாது நாற்புறமும் சுழன்று பற்றியதில் த.வி.கூ.தலைவர்களையும் பலிகொண்டு, முள்ளிவாய்க்கால் வரை சென்று முடிந்தது.

அது போன்றதொரு ‘தீ வளர்ப்பை’ இந்தத் தேர்தலிலும் தமிழ்க் கூட்டமைப்பினர் செய்து வெற்றி கண்டிருப்பதாகவே தோன்றுகின்றது. தேர்தல் தேவைக்காக இளைஞர்களிடம் தவறாக மூட்டிவிடப்படும் இந்தத் தீ, மீண்டும் எமது மக்களை மற்றொரு முப்பது வருட வாழ்வுக்கு இட்டுச்சென்றுவிடக் கூடாது என்பதே எமது கவலை. ஏனெனில், நாம் மறுபடி அந்த வட்டத்தை ஆரம்பிக்கிறோமோ என்ற சந்தேகம் தோன்றியிருப்பதையே சிந்திக்கும் தரப்பினரிடம் சொல்லிவைக்க வேண்டியிருக்கிறது.

ஒரு சராசரி மனிதன் இன, மொழி, மதம் போன்ற விஷயங்களில் உணர்ச்சிவசப்படுபவனாகவும் அடிப்படைவாதியாகவும் இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் பேராசிரியர்களும், புத்தி ஜீவிகளும், உயர்கல்வி பெற்ற மாணவர்களும், எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் அப்படி இருப்பதை அறிய நேர்வதுதான் துயரமானது.

மக்கள் எப்போதும் சரியானதைத் தேர்ந்தெடுப்பதில்லை. விரும்புவதைத்தான் தேர்வு செய்கின்றார்கள் என்று சொல்லப்படுவதுண்டு. அவர்களது விருப்பத்தை உருவாக்கப் பல்வேறு காரணிகளும் உபாயங்களும் உள்ளன. இனங்களுக்கிடையே, மதங்களுக்கிடையே, குழுக்களுக்கிடையே துவேச உணர்வைத் தூண்டிவிடுதல் என்பது மிக எளிதாக மக்களைக் கவர்ந்து அவர்களை ஒன்றுபட வைக்கக்கூடிய உத்தியாகும்.

மக்களது இன்றைய நல்வாழ்வுக்கு, எதிர்காலத்திற்கு, வருங்கால சந்ததிக்கு நல்லது செய்திருக்கக் கூடிய வெற்றி, கிடைக்காமல் அல்லது நடக்காமல் போய்விடுவதால் அந்த இலட்சியமும், அதற்கான சாத்திய பூர்வ அணுகுமுறைகளும் செயற்திட்டங்களும் தோற்றுவிடும் என்றாகாது.

தாமதமாகவேனும் மக்கள் அந்த இலக்கையும், விரும்புகின்ற எளிய வாழ்வையும் அடைந்தே தீருவார்கள் - சரியானவை சில சமயம் தாமதமாகவே புரிந்துகொள்ளப்படுவதைப் போல.

- ஆசிரியர் -

# இந்தியர்கள் எனக்கூறி மும்பை சென்ற இலங்கைப் பணிப்பெண்கள் பிடிபட்டனர்

(கதிர்காமம்)

சவூதி டமாமில் பணிபுரிந்த இலங்கைப் பணிப்பெண்கள் மூவர் தம்மை இந்தியர்கள் என அடையாளங்காட்டி மும்பைக்கு செல்லமுற்படுகையில் கடந்த வாரம் குடிவரவு அதிகாரசபையினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று சவூதி அரேபியச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதுதொடர்பில் இலங்கைத் தூதரகம் கருத்துத் தெரிவிக்கையில், குறித்த பணிப்பெண்கள் இலங்கைக்கு திரும்புவதற்கு விரும்பாமையே இதற்குக் காரணம் என்று கூறியுள்ளனர்.

குறித்த இலங்கைப் பணிப்பெண்கள், இந்திய அதிகாரிகளினால் வழங்கப்பட்ட அவசர சான்றிதழை காண்பித்து தம்மை இந்தியர்கள் என சவூதி அரேபிய அதிகாரிகளை நம்பவைத்துள்ளனர்.

தமிழ்நாடு மற்றும் இலங்கையில் பேசப்படும் மொழியான தமிழ் மொழியை இவர்கள் பேசுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மங்கலேஸ்வரி, ஷிரீன் முஹம்மது நூர் மற்றும் பரீதா ராஜ் ஆகிய இந்த மூன்று பணிப்பெண்களும் தாம் டமாமில் பணிபுரிந்த வீட்டிலிருந்து தப்பியோடியபோது அவர்களது அநுசரணையாளர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாம் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்று இவர்கள் அரசாங்க அதிகாரிகளிடம் கூறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து சவூதி அதிகாரிகள், இவர்களை இந்தியாவிற்கு அனுப்புவதற்கு தேவையான பயண ஆவணங்களை வழங்குமாறு இந்திய தூதரக அதிகாரிகளிடம் கேட்டுள்ளனர்.

குறித்த பணிப்பெண்கள் உண்மையில் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று அவர்களை ஏற்றுக்கொள்ள முடியாது என மும்பை குடிவரவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

எனவே இவர்கள் பேசும் மொழி மற்றும் ஏனைய ஆவணங்களைக் கொண்டு இவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்களா என்பது குறித்து ஆராய்வோம் என சவூதி அரேபியா தெரிவித்துள்ளது.

அதேவேளை, இவ்வாறான மோசடிகள் தொடர்பாக கண்டறிய மிகவும் ஆற்றல் வாய்ந்த நுட்பங்களைக் கையாளவுள்ளதாகவும், சவூதி அரேபியா மேலும் குறிப்பிட்டுள்ளது.

## தேசிய தொடர்பாடல் நிலையம் 30 ஆம் திகதி வரை செயற்படும்

(கொழும்பு)

தேர்தல்கள் செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள தேசிய தொடர்பாடல் நிலையம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை செயற்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பிலான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலுக்குப் பின்னரான வன்முறைகளைத் தடுப்பதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்றுமுதல் முன்னெடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமைக்காக 37 வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# தேர்தல் வன்முறைகளுடன் தொடர்புடைய 136 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

(மன்னார்)

நடந்து முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரையில் 107 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான பிரசாந்த ஜயக்கொடி தமிழ்மிரருக்கு தெரிவித்தார்.

அத்துடன், மேற்படி தேர்தல் வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இதுவரையில் 136 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, ஹட்டன், கடுவெல, நுகேகொட, ஹோமாகம, மினுவன்கொட மற்றும் ரத்தனகல போன்ற பிரதேசங்களிலிருந்தே மேற்படி தேர்தல் வன்முறைகள் தொடர்பான பெருமளவிலான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறிய பொலிஸ் பேச்சாளர், இவை தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மேலும் குறிப்பிட்டார்.

## அகற்றப்படாத மண் அணை

(அம்பலப்பெருமாள்)

அக்கராயன் சந்திப்பகுதியில் அமைக்கப்பட்ட மண் அணை அகற்றப் படாமல் உள்ளது. தனியார் ஒருவரின் காணியில் அமைக்கப்பட்டிருக்கும் உயர மண் அணையே அகற்றப்படாத நிலையிலுள்ளது.

இச்சந்திப் பகுதியில் எரிபொருள் நிலையம். பொலிஸ் நிலையம் வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் இம்மண் அணை அகற்றப்படவில்லை என்பதுடன் இச்சந்தியின் அபிவிருத்திக்கு இப்பாரிய மண் அணை தடையாவுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (121)

# வவுனியாவில் கடந்த ஆறு மாதத்தினுள் 27 சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள்

(வவுனியா)

வவுனியா பொலிஸ் பிரிவிற்குள் கடந்த ஆறு மாத காலப்பகுதிக்குள் 27 சிறுவர் துஸ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாக சிறுவர் நன்னடத்தை பிரிவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சிறுவர் துஸ்பிரயோகங்களால் 18 பெண் பிள்ளைகளும், 9 ஆண் பிள்ளைகளும் பாதிப்படைந்துள்ளதாகவும், இதில் 5 வகையான துஷ்பிரயோகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் புதிய குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்பட்ட இடங்களிலேயே சிறுவர் துஸ்பிரயோகங்கள் அதிகளவில் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவற்றில் சிதம்பரபுரம், கற்குளம், தரணிக்குளம் போன்ற இடங்கள் முதன்மை வகிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# எரிபொருள் விநியோகக் குழாய்களை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவை எரிபொருள் களஞ்சியம் வரையிலான எரிபொருள் விநியோக பிரதான குழாய் புதிதாக அமைப்பதற்கான திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் தொடர்பாக அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டதும் அது தொடர்பான நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது பயன்படுத்தப்படும் இரு குழாய்களும் 40 வருட பழமைவாய்ந்ததாகும். இந்தக் குழாய்களில் ஏற்படும் எண்ணெய்க் கசிவை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எரிபொருள் களஞ்சிய நிறுவனம் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்





புற்றுநோய் வைத்தியசாலையை யாழ். மாவட்டத்தில் நிறுவுவதற்கு ஆதரவு தெரிவித்து தெய்வேந்திர முனையிலிருந்து ஆரம்பித்து நடைபெற்ற நடைபயணத்தினை கனகராயன்குளம் மகாவித்தியாலய அதிபர் , ஆசிரியர், மாணவர்கள் வரவேற்பதையும் மாணவர்கள் உண்டியலில் பணம் வழங்குவதையும் காணலாம். (12)

## கண்ணிவெடி அகற்றப்பட்ட சான்றிதழ் கிடைத்ததும் எஞ்சியோரும் மீள் குடியேற்றம்

### -யாழ். அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் இதுவரை கிடைக்கப் பெறாமையால் 1636 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் உள்ளனர். சான்றிதழ் கிடைத்ததும் இவர்கள் மீளக் குடியமர்த்தப்படுவார்கள் என யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடமராட்சி கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட மீள்குடியமர்வு நடவடிக்கைகளில் சுமார் 683 குடும்பங்களைச் சேர்ந்த 2830 பேருக்கான மீள்குடியமர்வு நடவடிக்கையுடன் வடமராட்சி கிழக்கிற்கான மீள்குடியமர்வும் முற்றுப் பெருகின்றது. அத்துடன் இப்பகுதியில் இயங்கிவந்த குடத்தனை நலன்புரி நிலையமும் ஏற்கனவே இரு மாதங்களுக்கு முன்பாக மூடப்பட்டுள்ளது.

கண்ணிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் இதுவரை கிடைக்கப்பெறாமையால் சங்கானையில் மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 664 குடும்பங்களையுடைய 2563 பேரையும் சண்டிலிப்பாயில் இதுவரை சுமார் 409 குடும்பங்களைச் சேர்ந்த 1445 பேரையும் ஊடுவிலில் குப்பிளான், புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 174 குடும்பங்களைச் சேர்ந்த 644 பேரையும் கோப்பாயில் 389 குடும்பங்களைச் சேர்ந்த 1326 பேரையும் இதுவரை மீளக் குடியமர்த்தவில்லை இவர்களை மீளக்குடியர்த்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

## அக்கராயன் பிரதான ஆற்றினை துப்புரவு செய்யக் கோரிக்கை

(அம்பலப்பெருமாள்)

அக்கராயன் குளத்தின் இடது வலது கரை வாய்க்கால்களுக்கு நடுவில் இருக்கும் மேலதிக நீர் வெளியேறும் பிரதான ஆற்றினை துப்புரவு செய்து தருமாறு இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அக்கராயன்குளம் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக முழுமையான புனரமைப்புப் பணிகள் நடைபெறவில்லை தற்போது 300 மில்லியன் செலவில் முழுமையான புனரமைப்பு பணிகள் நடைபெறும் நிலையில் குளத்தின் வான் வழியாக பெருமளவு நீர் வெளியேறி முதன்மை ஆற்றின் வழியாக பூநகரி குடமுறுட்டி ஆற்றின் வழியாக பூநகரிக் கடலில் கலக்கின்றது. அக்கராயன் குளத்து நீர் பாய்ந்து செல்லும் பிரதான ஆற்றில் பொருமளவு மரங்கள் குறிந்து விழுந்து கிடக்கின்றன.

இம்மரங்கள் துப்பரவு செய்யப்படாமையால் மழை காலத்தின் போது ஆற்று நீர் பெருகி வெளியே செல்லமுடியாது விவசாய நிலங்களை அழிப்பதுடன் மக்கள் குடியிருப்புக்களுக்குள்ளும் வெள்ள நீர் பாய்ந்து அழிவுகளை ஏற்படுத்தும் நிலை காணப்படுகிறது. (121)

## மிதிவெடிகள் அகற்றப்படாததால் 4 பாடசாலைகள் இயங்கவில்லை

(அம்பலப்பெருமாள்)

பளைக் கல்விக் கோட்டத்தின் 4 பாடசாலைகள் இயங்க முடியாமல் இருப்பதற்கு மிதிவெடிகள் இப்பகுதிகளில் அகற்றப்படாமயே காரணம் என பளைக் கோட்டக் கல்வி அலுவலர் ஆனந்தசிவம் தெரிவித்துள்ளார்.

பளை கல்வி கோட்டத்தில் அல்லிப்பளை, கிளாலி, முகமாலை வேம்பொடுகேணி ஆகிய நான்கு பாடசாலைகளும் தற்போது மூடப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகள் அமைந்துள்ள கிராமங்களில் மதிவெடிகள் இருப்பது அடையாளங்காணப்பட்டுள்ளது. எனினும் இம்மிதிவெடிகள் அகற்றி முடிந்த பின்னர். பாடசாலை இயங்கக் கூடிய சூழல் உருவாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (121)

## புராணங்களும், இதிகாசங்களும் நல்வாழ்வுக்கு வழி காட்டுகின்றன

### நூல் வெளியீட்டில் பேராசிரியர் இ. குமார வடிவேல் தெரிவிப்பு

(யாழ்நகர் நிருபர்)

புராணங்களும் இதிகாசங்களும் இன்றைய எமது மக்களின் நல்வாழ்விற்குச் சிறந்த வழிகாட்டியாக அமைக்கின்றன. இவற்றைக் கற்பதன் மூலம் ஆன்மீகப் பண்பு மேலோங்கப் பெற்று சமூகம் போற்றும் சிறந்த விழுமியப்பண் புள்ளவர்களாக வாழமுடியும். என யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் இ.குமாரவடிவேல் தெரிவித்தார்.

காரைநகர் ஈழத்துச்சிதம்பரத்தில் மண்டலாபிஷேக தினத்தன்று நடைபெற்ற விநாயகபுராணம் நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இன்று புராணங்கள் இதிகாசங்கள் என்பவற்றைக் கற்போர் தொகை குறைந்து வருகிறது. நவீன ஊடகங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட இன்றைய மக்கள் இயன்றளவிற்கு எமது பண்டைய தமிழ் இலக்கியங்களைத் தேடிக்கற்க முன்வர வேண்டும்.

பண்டைய தமிழ் இலக்கியங்களான புராணங்கள், இதிகாசங்கள் போன்ற நூல்களைக் கற்பதன் மூலம் ஒழுக்க நெறிகளையும் உயர்ந்த விழுமியங்களையும் பெற்று வாழ்வில் உயர்நிலையை அடையமுடியும்.

காரைநகர் சைவமும் தமிழும் தழைத்தோங்கிய புண்ணியபூமி இந்த மண்ணில் அமைந்துள்ள ஈழத்துச்சிதம்பரத்தில் சைவத் தமிழ்மக்களின் அரும்பொக்கிஷமான விநாயக புராணம் வெளியிடப்படுவது இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் பெருமை சேர்ப்பதாக அமைகிறது என்றார். (10)

## நோயாளர் தங்கும் விடுதி இலக்கங்கள் இல்லாததால் பல்வேறு நெருக்கடிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் நோயாளர் தங்கும் விடுதிகளுக்கான இலக்கங்கள் குறிப்பிடப்படாததால் நோயாளிகளை பார்வையிட வருவோரும் நோயாளிகளும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு அம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் இருந்தும் மக்கள் வந்து விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்றுவருகின்றனர். அத்துடன் தற்போதைய நிலையில் பல்லின சமூகத்தவர்களும் இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறச்செல்வதுடன் விடுதிகளிலும் தங்கி சிகிச்சை பெறுகின்றனர். இவர் களைப் பார்வையிடுவதற்காக வருவோ ரும் விடுதிகளில் தங்கி இருப்பேரும் விடுதிகளுக்கான இலக்கங்கள் குறிப்பிடப்படாதத்துடன் அவற்றுக்குச் செல்வதற்காக பாதை தொடர்பான விளக்கங்களும் இல்லாததால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுவருகின்றனர்.

அத்துடன் சில இடங்களில் ஆங்கிலத்தில் மட்டும் அறைகளுக்கான பெயர்கள் குறிப்பிடப்படுவதால் சிகிச்சை பெறச்செல்வோரும் ஏனையவர்களும் நெருக்கடிகளுக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (77)

## போக்குவரத்து சேவை சீர் இன்மையால் வடமராட்சிக் கிழக்கு மக்கள் கவலை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு எல்லை கிராமங்களில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் சீரான பொதுப் போக்குவரத்துச் சேவைகள் நடைபெறாததால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆழியவளை ஊடாக கட்டடைக்காடுவரை ஐந்து சேவைகள் நடத்துவதற்கு இரு பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. இதில் ஒரு பேருந்து பழு தடைந்தால் ஓரிரு சேவைகள் இடம் பெறாத நிலை காணப்படுவதாகவும் சிலவேளைகளில் இரு பேருந்துகளிலும் வீதியில் பழுதடையும் நிலையும் காணப்படுகிறது.

இதைவிட யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும்போது இப்பேருந்துகள் சில வேளைகளில் தாமதமாகவே செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஆசிரியர்கள் உத்தியோ கத்தர்கள் பாடசாலை மாணவர்கள் பல்வேறு சிரங்களை எதிர்கொள்வ தாகவும் குறிப்பாக மாலை வேளைகளில் பேருந்து இல்லாமையால் தாம் வீடுகளக்கு நடந்தே செல்ல வேண்டிய நிலைகாணப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குடாநாட்டு உள்ளூர்ச் சேவைகளில் அதிக தூரம் கொண்ட இப்பாதையூடான சேவைக்கு நல்ல நிலையில் உள்ள பஸ்வண்டிகளை சேவையில் ஈடுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பாதிக் கப்பட்ட பிரயாணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (70)

# துணுக்காய் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்பயிர்களில் நோய்த்தாக்கம்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையின் நெற்பயிர்களில் நோய்த் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பெருமளவு நிதிச் செலவில் சிறுபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ள போதிலும் நெற்பயிர்களில் காணப்படும் நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்த தாம் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுள்ளதாக விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக அம்பலப்பெருமாள் குளம், கோட்டைக்கட்டிய குளம், ஆலங்குளம், தெணியன் குளம் ஆகிய பகுதிகளில் உள்ள சிறுபோக வயல் நிலங்களிலேயே இந்த நோய்த்தாக்கம் காணப்படுகிறது.

சுமார் 500 ஏக்கர் வரையான வயல் நிலப்பகுதியில் மேற் கொள்ளப்பட்ட நெற்செய்கையில் பரவலாகவே இந்த நோயத் தாக்கம் காணப்படுகின்றது.

பயிர்கள் மஞ்சள் நிறமாகி, வளர்ச்சி குன்றிக் காணப்படுகின்றன. பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில் நெற்செய்கையை மேற்கொண்டு வரும் இப்பகுதி விவசாயிகள் இந்த நோய்த் தாக்கம் குறித்து மிகவும் கவலையடைந்துள்ளனர். (121)

# குள புனரமைப்பை விரைவுபடுத்தி காலபோக செய்கைக்கு உதவுக

## விவசாயிகள் கோரிக்கை

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி அக்கராயன் குள புனரமைப்புப் பணிகள் இவ்வாண்டு காலபோகச் செய்கை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் துரித கதியில் முடித்துத் தருமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கராயன்குளத்தின் அணைக் கட்டு 2 அடி உயர்த்தப்பட்டு குளத்தின் நீர் தடுப்பணை மீள அமைக்கப்பட்டு வருவதுடன், குளத்தின் இடது வலது கரை இருவாய்க் கால்களும் பெருமளவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் புனரமைப்புப் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. தாமதமாகவே இப் புனரமைப்பு நடைபெறுவதால், காலபோக நெற்செய்கை மேற் கொள்ள முடியாது போகலாம் என விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.


துரிதகதியில் இக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவுற்றால், காலபோக செய்கையை மேற்கொள்ள முடியும் எனவும், இது தொடர்பாக அதிகாரிகள் கவனம் எடுக்குமாறும் விவசாயிகளினால் தெரிவிக்கப் படுகிறது. (121)

## தூக்கில் தொங்கியவர் வைத்தியசாலையில் அனுமதி

(உடுவில்)

யாழ்.உடுவில் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் யுவதி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் சு.உமா (வயது 25) என்பவரே தூக்கில் தொங்கி ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என யாழ். போதனா வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (09)

யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலையில் மாற்று வலுவுள்ளோருக்கான உபகரணங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது. தயாரிப்பில் ஈடுபடும் ஊழியரையும் அதிகாரி ஒருவர் பார்வையிடுவதையும் செயற்கைக்கால் செய்வதையும் காண லாம். (படங்கள்:சுமித்தி)

# கம்பிகளுக்கு பாதுகாப்பு திரவகம் பூசுவதால் மன்னாரில் அடிக்கடி தடைப்படும் மின்சாரம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல நாட்களாக இரவு மற்றும் பகல் வேளையில் மின்சாரம் தடைப்படுவதினால் மக்கள் தொடர்ந்து அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

ஒரு வாரத்தில் இரு நாட்கள் என்ற அடிப்படையில் எந்தவித அறிவித்தலுமின்றி மன்னாரில் மின்சாரம் தடைப்படுகின்றது.

இவ்வாறு திடீர் திடீர் என மின்சாரம் தடைப்படுவதினால் மின் சாதனப் பொருட்கள் பழுதடைவதாக மின்பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து மின்தடை ஏற்படுவது குறித்து அரசாங்க அதிகாரிகளும் கவனம் செலுத்துவது இல்லை என்பதுடன், அவர்களின் அசமந்தப்போக்கு காரணமாகவே மேற்படி பிரச்சினை தொடர்வதாகவும் மன்னார் மாவட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின் தடைப்படுவதினால் வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மின்சாரசபை அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மின்கம்பங் களில் உள்ள கம்பிகளுக்கு பாதுகாப்பான திரவகம் பூசப் படுவதினாலேயே தொடர்ந்து மின் தடைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# செட்டிகுளத்தில் நடமாடும் சேவை 900 மக்கள் பயன் பெற்றனர்

நீதி, நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டமும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் இணைந்து செட்டிகுளத்தில் நேற்று முன்தினம் நடத்திய நடமாடும் சேவையில் சுமார் 900 பொதுமக்கள் கலந்து கொண்டு நன்மையடைந்தததாக செட்டிகுளம் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையின்போது காலம் கடந்த பிறப்பு, இறப்பு திருமண பதிவுகளை செய்யாதவர்களுடைய பதிவுகள் மேற்கொள்ளப் பட்டன.

இந்தியாவில் பிறந்த பிள்ளைகளுக்கு இலங்கையில் பிறப்பு சான்றிதழ் பெறவும் பிரஜாவுரிமை வழங்கலிலுள்ள தடைகளுக்கும் நடமாடும் சேவையின்போது தீர்வுகள் காணப்பட்டனவெனவும் அவர் கூறினார்.

# அராலி முருகமூர்த்தி வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். அராலி முருகமூர்த்தி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி ஜெ.தருமராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் பிரதம விருந்தின்ராகவும், சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவவிருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் வி.சிவஞான போதன் கலந்து கொள்ளவுள்ளதுடன் ஓய்வுபெற்ற அதிபர் நா.நடராசா நினைவுப் பேருரையை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் வரவேற்பு நடனம் மற்றும் நினைவுப்பேருரை விருந்தினர்கள் உரை, பரிசில் வழங்கல் கலைநிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளது.

# வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்தின் பெருவிழா நாளை

(மன்னார்)

மன்னார் வங்காலை புனித அன்னம்மாள் ஆலய பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா திருப்பலி தொடர்ந்து நவநாள் திருப்பலியாக மாலை 5.30 மணிக்கு இடம்பெற்று வந்த நிலையில் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு வேஸ்பர் திருவிழா இடம்பெறவுள்ளது.

நாளை 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு அன்ரனி விக்டர் சூசை தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

# தேர்தல் முடிவுகளை அறிவதில் ஆர்வம் காலையில் விற்றுத் தீர்த்த பத்திரிகைகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகளை அறிவதற்கு மக்கள் தீவிர அக்கறை காட்டியதுடன், நேற்றுக் காலையிலேயே குடாநாட்டில் வெளியாகிய அனைத்துப் பத்திரிகைகளும் விற்று முடிந்ததுடன் பலர் ஏமாற்றத்துடன் திரும்பியிருந்தாக குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்தும் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் நேற்று முன்தினம் இரவு முதல் தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும் வெளிவந்தவண்ணமிருந்தது இருந்தும் மக்கள் காலைப் பத்திரிகைகளில் முழுமையான தேர்தல் முடிவுகள் மற்றும் தேர்தல் தொடர்பான செய்திகளை அறிய பத்திரிகையை வாங்கிப் படிக்க விற்பனை நிலையங்களில் அதிகாலையிலேயே காத்திருந்தனர்.

பத்திரிகைகளும் தாமதமாகவே பத்திரிகை விற்பனை நிலையங்களுக்கு வந்திருந்தன. எனினும், வந்த பத்திரிகைகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்ததுடன், மேலும் பத்திரிகை கிடைக்காது பலர் ஏனையவர்களிடம் வாங்கிப் படித்ததை அவதானிக்க முடிந்தது.

யாழ் குடாநாட்டில் குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் காலை 7.30 மணிக்கு அனைத்துப் பத்திரிகைகளும் விற்றுத் தீர்ந்து விட்டிருந்தது. இதன் பின்னர் வந்தவர்கள் ஏமாற்றத்தோடு சென்றதுடன் அருகில் உள்ளவர்களிடம் வாங்கிப் படித்ததாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதேபோன்று ஏனைய பகுதிகளிலும் பத்திரிகைகளுக்கு கிராக்கி நிலவியது. (பா,12)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(25.07.2011 - திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆடி 9 ஆம் நாள்.

இராகுகாலம் 07.32-9.02, சுபநேரம் 12.02 -1.32,

நட்சத்திரம் கார்த்திகை பி.இ. 5.10 வரை

திதி: தசமி பி.இ 1.40 வரை , கார்த்திகை விரதம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

**மேடம்:-** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, அதிகாரப் போட்டி, நண்பர் வருகை, திடீர் பயணம்.

**ரிஷபம:-** பணக்கஷ்டம், விருந்தினர் வருகை, உடல் நலக்குறைவு, குடும்பத தில் கவலை, விபத்து வரலாம்.

**மிதுனம் :-** குடும்பத்தில் குழப்பநிலை, உடம்பு நலம் பாதிப்பு, சகோதர உதவி, பணக் கஷ்டம், காரியத்தடை.

**கடகம்:-** பணக்கஷ்டம், குடும்பத்தில் சலனம், நண்பர் வருகை, அதிகாரப் பகிர்வு, திடீர் பயணம்.

**சிம்மம்:-** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, வீட்டில் நிம்மதி, தேக ஆரோக்கியம், இறைவழிபாடு.

**கன்னி :-** பணக் கஷ்டம், குடும்பத்தில் குழப்ப நிலை, நண்பர் வருகை, அதிகாரப் போட்டி, தேக ஆரோக்கியம்.

**துலாம் :-** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, சகோதர உதவி, தேக ஆரோக்கியம், காரியசித்தி.

**விருச்சிகம்:-** காரியத்தடை, பணக் கஷ்டம், சகோதர வெறுப்பு, உடல்நிலை பாதிப்பு, அதிகாரப் போட்டி. திடீர் பயணம்.

**தனுசு:-** குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், நிம்மிக்குறைவு, உடல் நிலை பாதிப்பு, அதிகாரப் போட்டி.


**மகரம:-** பணவரவு, மனமகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தியாக சிந்தனை.

**கும்பம் :-** பணக் கஷ்டம், உடல் நிலை பாதிப்பு, குடும்பத்தில் சபலம், அதிகாரப் போட்டி, விபத்து வரக்கூடும்.

**மீனம்:-** பண வரவு, தேக ஆரோக்கியம், விருந்தினர் வருகை, குடும்பத்தில் மகிழ்ச்சி, திடீர் பயணம்.

# எத்தனையாவது இடம் என்பதனை விடவும் பெற்றுக்கொண்ட அனுபவமே முக்கியம்

## கூறுகிறார் சென்.பற்றிக்ஸ் பயிற்றுநர் நிசாந்தன்



(யாழ்ப்பாணம்)

நாங்கள் எத்தனையாவது இடத்தைப் பிடித்தோம் என்பதற்கு அப்பால், அதிலிருந்து எவ்வளவு அனுபவங்களைப் பெற்றுக் கொண்டோம் என்பதே முக்கியம். அந்த வகையில் எமது வீரர்களின் சிறப்பான ஒருங்கிணைந்த ஆட்டத்தின் மூலம் எமது கல்லூரி அணி வெளி மாவட்டங்களிலும் திறமை மிக்க அணி என்பதை நிரூபித்துள்ளது என்றே நான் கருதுகின்றேன் என சென்.பற்றிக்ஸ் பயிற்றுனர் நிசாந்தன் தெரிவித்தார்.

சீனிகமவின் விளையாட்டுக்கான நல்லுறவுக்கான நிறுவனத்தினால் நடத்தப்பட்ட முரளி கிண்ணத்தில் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது சென் பற்றிக்ஸ் கல்லூரி. இது குறித்து நேற்று எமது செய்தியாளர் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் கல்லூரிகள் மற்றும் சீனிகம கிரிக்கெட் அணி உள்ளிட்ட அணிகளுடன் எமது பாடசாலை அணியும் இத்தொடருக்கு அழைக்கப்பட்டது.

நாங்கள் இத்தொடரில் விளையாடியதையே மிகுந்த கௌரவமாகக் கொள்கின்றோம். இதில் எமது வீரர்களின் மிகச் சிறப்பான செயற்பாட்டினால் நாங்கள் மூன்றாவது இடத்தைப் பெற்றுக்கொண்டோம். ஒவ்வொரு வீரரும் தங்கள் திறமைகளை சரியான நேரத்தில் வெளிப்படுத்தியதாகவே நான் உணர்கின்றேன். அந்த வகையிலேயே நாங்கள் மூன்றாவது இடத்தைப் பிடிக்கக்கூடியதாகவிருந்தது.

வெளிநாட்டு அணிகளுடன் விளையாடிமை வீரர்களுக்கு மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியதுடன் அதனூடாக நிறை அனுபவங்களையும் பெற்றுள்ளனர்.

அத்துடன் போட்டி ஒழுங்கமைப்புக் குழுவின் அங்கம் வகித்த இங்கிலாந்து முன்னாள் வீரர் ரோஜரும் எமது அணி வீரர்களின் திறமையைப் பாராட்டியிருந்தார். களத்தடுப்பு, பந்து வீச்சு மற்றும துடுப்பாட்டத்தில் எமது வீரர்கள் திறமையாகச் செயற்பட்டதாகவும் பாராட்டினார

வடக்கில் இவ்வாறு திறமையான வீரர்கள் இருப்பதையும் அவர்களின் கிரிக்கெட் மீதான ஆர்வத்தையும் வியந்து பார்த்த அவர்கள் கிரிக்கெட் தொடர் பான நுட்பங்களையும் அவர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

அந்த வகையில் பார்க்கையில் எமது கல்லூரி அணிக்கு நிறைய அனுபவங்கள் இத்தொடரின் மூலமாக கிடைத்திருப்பதாகவே நான் உணர்கின்றேன். அவற்றைக் கொடுத்து அடுத்த கட்ட நிலைக்கு எமது அணியை கொண்டு செல்வதே எனது நோக்கம் என்றார்.

# முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடாசலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றுக்காக 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்துள்ளது.

இப்போட்டித் தொடரில் 15 மற்றும் 17 வயதுப் பிரிவு அணிகள் போட்டியிட்டன.

கடந்த நான்காம் திகதி முதல் ஆரம்பமாகி இப்போட்டி கடந்த 22ஆம் திகதியுடன் முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்துள்ளது.

இதன் பிரகாரம் முதல் சுற்று ஆட்டங்களிலிருந்து இரண்டாவது சுற்று ஆட்டங்களுக்குத் தெரிவான பாடசாலை அணிகள் குறித்தும், இரண்டாவது சுற்று ஆட்டங்கள் இடம்பெறும் போட்டி அட்டவணை குறித்தும் விரைவில் அறிவிக்கப்படுமென போட்டி ஏற்பாட்டளார்கள் தெரிவித்தனர்.



இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற தடகளப் போட்டியின் அஞ்சலோட்டப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. முதலாமிடத்தைப் பெற்றுக் கொடுத்த அஞ்சலோட்ட அணி வீரர்களான வி. ஞானதீபன், ரீ. திரோன் மற்றும் கே. ஐஸ்கரன், எஸ். கோபிநாத் ஆகியோர் பயிற்றுநர் செல்வி இ. அருளம்பலத்துடன் நிற்பதைக் காணலாம்.

# காய்ச்சலுடன் விளையாடிய சச்சின்

(லண்டன்)

லண்டனின் லோட்ஸ் நகரில் இந்தியா-இங்கிலாந்து இடையேயான முதல் டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது. முதல் டெஸ்ட்டின் 3ஆவது நாளான நேற்றுமுன்தினம் தனது முதல் இன்னிங்சை இந்தியா தொடங்கியது. இதில் இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின், சதம் அடித்து தனது 100 ஆவது சதத்தை பூர்த்தி செய்து, ஒரு புதிய சாதனையை நிகழ்த்துவார் என உலககிரிக்கெட் இரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால இந்தப் போட்டியில் காய்ச்சல் காரணமாக சச்சின், மத்திய வரிசையிலேயே களமிறங்கினார். உணவு இடைவேளை வரை அவரது உடல்நிலை சீராக இருந்ததால், இந்திய அணி 2 விக்கெட் இழப்பிற்கு 77 ரன்கள் எடுத்திருந்த நிலையில் சச்சின் களமிறங்கினார். சதம் அடிப்பார் என்ற அனைவரின் எதிர்பார்ப்பையும் ஏமாற்றமாக்கிய சச்சின், 58 பந்துகளில் 34 ரன்கள் எடுத்த நிலையில் அவுட் ஆனார் அவுட்டான சச்சின் மைதானத்தில் இல்லாமல் உடனே தான் தங்கி.இருந்த விடுதிக்குச் சென்றுவிட்டார். டாக்டர்களின் அறிவுரையின்படி மருநதுகள் எடுத்துக்கொண்ட சச்சின், நன்றாகத் தூங்கி ஓய்வு எடுத்தார். உடல்நிலை குணமானதும் இங்கிலாந்திற்கு எதிரான 2 ஆவது இன்னிங்சில் அவர் விளையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ருவென்ரி - 20 போட்டிகளினால் அழிவை நோக்கி டெஸ்ட் தொடர்

## வருத்தமடைகிறார் ஸ்ரோஸ்



(லண்டன்)

"ருவென்ரி-20" போட்டிகளின் வெற்றியை அடுத்து, பழமை வாய்ந்த டெஸ்ட் தொடருக்கு மக்களிடையே வரவேற்பு குறைந்துவிட்டது என, இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் ஸ்ரோஸ் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது-

சமீபகாலமாக டெஸ்ட் தொடருக்கு மக்களிடையே வரவேற்பு குறைந்துவிட்டது. இதற்கு "ருவென்ரி-20" கிரிக்கெட் வருகை தான் காரணம். இது வேதனை அளிக்கிறது. தற்போது நடைபெற்று வரும் பெரும்பாலான டெஸ்ட் போட்டிகளில் மக்கள் கூட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகிறது.

இதற்கு விரைவில் சரியான தீர்வு காணப்பட வேண்டும். ஆனால் அதிர்ஷ்டவசமாக இந்தியா, இங்கிலாந்துக்கு இடையிலான போட்டியினை காண்பதற்கு மக்கள் ஆதரவு இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

உலகின் எப்பகுதியில் டெஸ்ட் போட்டிகள் நடந்தாலும், அதனை ஆதரிக்க வேண்டும். இதில் பங்கேற்கும் வீரர்களையும் ஊக்குவிக்க வேண்டும். மூன்று விதமான கிரிக்கெட் போட்டி இருப்பது நல்லது தான். இவை அனைத்தும் சரியான விகிதத்தில் வளர்ச்சி பெற வேண்டும்.

முந்தைய காலத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு, எந்த விதமான எதிர்ப்பும் இல்லாமல் இருந்தது. தற்போது அதனை அழிக்கும் ஆயுதமாக, மற்றொரு கிரிக்கெட்டே இருப்பது வேதனை. இப்போட்டிகளில் தேவையான சில மாற்றங்கள் செய்து அழியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

தேசிய ஹொக்கி பெண்கள் அணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவிகள் பெயர் விபரம், கமலினி மில்ஸ், மேசி அன்ரூஸ், கிருத்திகா சின்னத்தம்பி, பியூலோ ராஜசூரியர் ஆவர் (12)



# மோசமான பந்துவீச்சை வைத்துக்கொண்டு இந்தியா எவ்வாறு முதலிடத்தைப் பிடித்தது?

## கேட்கிறார் ஜெப்ரி போய்கொட்



(லண்டன்)

லோர்ட்ஸில் இடம்பெறும் இங்கிலாந்து அணிக்கான முதல் டெஸ்டில் இந்திய அணியின் பந்து வீச்சு மோசமாகவுள்ளது. இப்படிப்பட்ட பந்து வீச்சை வைத்துக் கொண்டு இங்கிலாந்து அணியின் அனைத்து விக்கெட்டுக்களையும் இந்திய அணி எப்படி வீழ்த்தப் போகின்றது என்பது தெரியவில்லை. அத்துடன் உலகின் முதலாமிடமென்ற அந்தஸ்த்தை எப்படிப் பெற்றார்கள் என்பதே வியப்பாக உள்ளதென இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் ஜெப்ரி போய்கொட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

லோர்ட்ஸ் டெஸ்டில் பீற்றர்சன் 49 ரன்னில் அவுட் ஆகியிருக்க வேண்டும். ஆனால் நடுவர் ஆசாப் ராப், சரியாக கவனிக்காததால், இரட்டைச் சதம் அடித்துவிட்டார்.

முதல் இன்னிங்சில் பீற்றர்சன் 49 ரன்கள் எடுத்த போது, பிரவீண் குமார் பந்தில் "சிலிப்" பகுதியில் இருந்த ராகுல் ராவிட் பிடியெடுத்தார். இதற்கு "ஸ்கொயர் லெக்" பகுதியில் இருந்த நடுவர் ஆசாத் ராப் (பாகிஸ்தான்), "அவுட்" கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அவுட் கொடுக்காமல் தவறு செய்துவிட்டார்.

19 மீற்றர் தொலைவில் இருந்து சரியாக பார்க்க முடியவில்லை என்றால், இவர் மூன்றாவது நடுவரிடம் முறையிட்டு இருக்கலாமே. துடுப்பாட்ட வீரர்கள் பந்து வீச்சை போட்டி முழுவதும் துடுப்பெடுததாடத்தான் செய்யத்தான் விரும்புவார்கள். இதற்காக அவர்களைக் குறை சொல்கிறேன் என்று அர்த்தமல்ல. நான் நடுவரைத் தான் குற்றம் சுமத்துகின்றேன். மூன்றாவது நடுவர் உதவியில்லாமல் தனிப்பட்ட முறையில் முடிவெடுத்தது ஆசாத் ராப் பின் குற்றம் என அவர் மேலும் தொிவித்தார்.

# லோர்ட்ஸ் மைதானத்தில் இரட்டைச் சதம் தனது சிறந்த இனிங்ஸாக அமைந்ததாம்

## பெருமை கொள்கிறார் பீற்றர்சன்



(லண்டன்)

இந்தியாவுக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸடில் இரட்டை சதம் அடித்தது, எனது சிறந்த இன்னிங்சாக அமைந்தது என, இங்கிலாந்து வீரர் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

ஆடுகளம் துடுப்பாட்டத்திற்குச் சாதகமாக இல்லை. இதற்கேற்ப இந்திய வீரர்களும் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தினர். இந்திய அணி முதலில் துடுப்பாட்டம் செய்திருந்தால், சிரமப்பட்டு இருப்பர். இந் தச் சூழ்நிலையில் முதல் மூன்று துடுப்பாட்ட வீரர்களைத் தான் பாராட்ட வேண்டும். ரோஸ் 83 பந்துகள், ரொட் 140 பந்துகள் என, இவர்கள் அதிக பந்துகளை எதிர்கொண்டு சிறப்பாக சமாளித்தனர்.

நான் 49 ரன்கள் எடுத்திருந்த போது, பிடியெடுத்த ராவிட், தொழில்நுட்பத்தை பயன்படுத்துமாறு நடுவரிடம் கேட்டிருக்கலாம். ஒருவேளை இது அவுட் இல்லை என, அவருக்குத் தெரிந்திருக்கலாம்.

பின் 73 ரன்கள் எடுத்த போது, ஒரு முறை டோனியின் பந்துவீச்சில் தப்பினேன். தொடர்ந்து சிறப்பாக செயற்பட்டு இரட்டை சதம் அடித்தது மகிழ்ச்சி. எனது சிறப்பான இன்னிங்சில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

ஐ.பி.எல். தொடரின் போது, எனது தலைமையில் பிரவீண் குமார் விளையாடியுள்ளார். இவர் சிறந்த பந்துவீச்சாளர். இந்திய வீரர்களில் யார், ஐந்து விக்கெட் வீழ்த்தினாலும் மகிழ்ச்சியடைவேன். இதை பிரவீண் குமார் சாதித்துள்ளார். இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், சிறப்பாகத்தான் பந்து வீசினார். ஆனால் ஆடுகளம் வேகப்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக உள்ளது எனத் தெரிவித்தார்.

# கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்பட்டு வரும் யாழ்.மாவட்ட ரீதியாகப் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இன்று இரவு 7 மணிக்கு சாவகச்சேரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

தொடர்ந்து இடம்பெறவுள்ள மற்றொரு போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் "பி" அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (118)



# ஏ.டி.பி.ரென்னிஸ் காலிறுதியில் சோம்தேவ் வர்மன் தோல்வி

(அட்லாண்டா)

அட்லாண்டா ரென்னிஸ் சம்பியனஷிப் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதியில், இந்திய வீரர் சோம்தேவ் தேவ்வர்மன் தோல்வி அடைந்தார்.

அமெரிக்காவில் உள்ள அட்லாண்டா நகரில், ஏ.டி.பி. ரென்னிஸ் சம்பியனஷிப் தொடர் நடக்கிறது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த ஒற்றையர் பிரிவு காலிறுதியல், இந்தியாவின் சோம்தேவ் தேவ்வர்மன், அமெரிக்காவின் மார்டி பிஷ்சை எதிர்கொண்டார். இதில் சோம்தேவ் 4-6, 3-6 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்தார்.

இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சோம்தேவ், பிலிப்பைன்சின் டிரிட் கான்ராட் 'ஹயு ஜோடி, லிதுவேனியாவின் ரிச்சர்ட் பிரான்கிஸ், பெல்ஜியத்தின் சேவியர் மாலிசி ஜோடியை சந்தித்தது. இதில் சோம்தேவ்-ஹயு ஜோடி 6-4, 4-6, 5-10 என்ற செட் கணக்கில், போராடி தோல்வியடைந்தது.

# விளையாட்டுச் செய்திகள்


# பொன்டிங்கை முந்தினார் ராவிட்



(லண்டன்)

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் இந்திய வீரர் ராகுல் ராவிட் 50 ரன்கள் எடுத்த போது, டெஸ்டில் அதிக ரன்கள் எடுத்தவர்களின் பட்டியலில் 2ஆவது இடத்தில் இருந்த அவுஸ்ரேலிய வீரர் ரிக்கிபொண்டிங்கை பின்னுக்குத் தள்ளினார்.

பொண்டிங் இதுவரை 152 டெஸ்டில் விளையாடி 12,363 ரன்கள் எடுத்துள்ளார். அவரை தனது 154 ஆவது டெஸ்டில் ராவிட முந்தியுள்ளார். அதிக ரன்கள் குவித்தவர்களின் பட்டியலில் ராவிட்டுக்கு முன்பாக மற்றொரு இந்திய வீரர் சச்சின் டெனடுல்கர் 14,726 ரன்களுடன் (178 டெஸ்ட்) முதலிடத்தில் இருக்கிறார்.



மொனாக்காவில் நடந்த ஹெர்குலிஸ் சர்வதேச தடகள போட்டியில் ஜமைக்காவின் உசைன் போல்ட் 100 மீ., ஓட்டத்தில், 9.88 வினாடியில் கடந்து தங்கம் வென்றார்.

# சச்சினுக்குப் பாரத ரத்னா விருது மத்திய அரசு மீண்டும் பரிசீலனை

(மும்பை)

இந்தியாவின் மிக உயர்ந்த "பாரத் ரத்னா" விருதைப்பெற, சச்சின் தகுதியானவர் தான். இதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்கமாட்டார்கள் என, விலாஸ்ராவ் தேஷ்முக் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தங்களது துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு, மத்திய அரசால் வழங்கப்படும் மிக உயர்ந்த விருது பாரத் ரத்னா. 1951 முதல் வழங்கப்பட்டு வரும் இவ்விருது, இதுவரை 41 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. கடைசியாக 2008இல் இந்துஸ்தானி இசைப்பாடகர் பீம் சென் ஜோஷிக்கு வழங்கப்பட்டது. பல்வேறு துறைகள் இவ்விருதுக்கான தேர்வு பட்டியலில் இருந்தாலும், விளையாட்டு பிரிவு, இதுவரை சேர்க்கப்படவில்லை. இந்தப் பட்டியலில் விளையாட்டு வீரர்களையும் சேர்க்க வேண்டும் என, சமீபத்தில் மத்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. இது விரைவில் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தெரிகிறது.

இதையடுத்து இந்தியாவில் கிரிக்கெட்டில் சிறந்து விளங்கும் சச்சினுக்கு, பாரத் ரத்னா விருது கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மும்பை கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக சமீபத்தில் தேர்வு செய்யப்பட்ட, மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக் கூறியது: கிரிக்கெட் வீரர் சச்சினுக்கு பாரத் ரத்னா விருது பெறும் தகுதியுள்ளது. மும்பை கிரிக்கெட் சங்கத் தலைவர் என்ற முறையில், இதுகுறித்து பிரதமர் மன்மோகன் சிங், உள்துறை அமைச்சர் சிதம்பரம், மத்திய விளையாட்டு அமைச்சர் அஜய் மேகன் ஆகியோரிடம் பேசுவேன். இவ்விருதுக்கான தேர்வு பட்டியலில் விளையாட்டு வீரர்களையும் சேர்க்க வேண்டும் என்று அவர்களிடம்கேட்டுக் கொள்வேன் என்றார். இவ்வாறு விலாஸ்ராவ் தேஷ்முக் கூறினார். இதையடுத்து, சச்சினுக்கு விருது கிடைக்கும் வாய்ப்பு பிரகாசமாகவுள்ளது

# கலாநிதி பாலித ஹோகன்னவுடனான சந்திப்பு வெற்றிகரமாக அமையவில்லையாம்

## என்கிறது சர்வதேச மன்னிப்புச்சபை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோர்கன்னவுடனான சந்திப்பு அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபை அறிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான தலைமை அதிகாரி ஜோஸ் லுயிஸ் டயஸிற்கும், கலாநிதி பாலித ஹோகன்னாவிற்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்த சந்திப்பு வெற்றிகரமாக அமையவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபை அறவித்துள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினர் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்பதனையே அரசாங்கத் தரப்பினர் வலியுறுத்தியதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இலங்கை அரசாங்கத்துடனான சந்திப்பு பெரும் ஏமாற்றத்தை அளிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சனல்4 ஆவணப்படம் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

இலங்கையில் உள்நாட்டு ரீதியான விசாரணைகள் நடத்தப்பட்டாலும், நடத்தப்படாவிட்டாலும் சர்வதேச ரீதியில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு அனுமதியளிக்குமாறு பல தடவைகள் சர்வதேச மன்னிப்புச் சபை ஊழியர்கள் கோரிக்கை விடுத்த போதிலும் அதற்கு உரிய வாய்ப்பு வழங்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வீதிகள் புனரமைப்பிற்கு கிடைக்கும் நிதியை கொள்ளையடிக்கின்றனர் ஆட்சியாளர்கள்

## குற்றஞ்சாட்டுகிறார் பொன்சேகா

(கொழும்பு)



வீதிகளை புனரமைக்க வெளிநாட்டு நிதி உதவிகள் கிடைப்பதாகவும் அவற்றில் 50 வீதத்தை ஆட்சியாளர்கள் கொள்ளையடிப்பதாகவும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.


சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் கொழும்பில் உள்ள தனியார் வைத்திய சாலைக்கு அழைத்து வரப்பட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். வீதிகளை புனரமைக்க 10 கோடி ரூபா ஒதுக்கப்பட்டால், அதில் 5 கோடி ரூபாவை ஆட்சியாளர்கள் கொள்ளையடிக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தென் பகுதிக்கான நெடுஞ்சாலையை அமைக்க ஒதுக்கிய நிதியில், 50 வீதமான பணத்தை தற்போதைய ஆட்சியாளர்கள் கொள்ளையடித்துள்ளனர். இந்த கொள்ளைகளை தடுத்து நிறுத்துவதற்காக தம்முடன் இணையுமாறு சரத் பொன்சேக்கா பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்

# எதிர்காலத்தில் உருவாகும் தமது அரசாங்கத்தில் மக்கள் பணத்தை தவறாக பயன்படுத்தியோருக்கு சட்ட நடவடிக்கை என்கிறார் கரு ஜயசூரிய

(கொழும்பு)

**எதிர்காலத்தில் உருவாகவுள்ள தமது அரசாங்கத்தின் கீழ் மக்கள் பணத்தை சூதாட்டத்திற்குப் பயன்படுத்திய சகலருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.**



அரசாங்கனத்தின் அனைத்து துறைகளிலும் காண்படுகின்ற பலவீனமான நிர்வாகம் மற்றும் ஊழல்கள் காரணமாக இடம்பெறும் நிதி மோசடியின் ஊடாக அரசியல் தலைமைத்துவத்தில் நிலவுகின்ற அசமந்தப் போக்கு வெளியிடப்படுவதாக அறிக்கை ஒன்றின் மூலம் கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

தரங்குறைந்த எரிபொருள் விற்பனையின் மூலம் பெரும்பாலானோர் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க நேரிட்டது அதற்கான பொறுப்பை எந்தவொரு அரசியல்வாதியோ அல்லது அதிகாரியோ இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை

இதேவேளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஹெஜின் கொடுக்கல் வாங்கள்களின் அடிப்படையில் ஸ்டேன்டர்ட் சார்டட் வங்கிக்கு 17.8 பில்லியன் ரூகாலை கூட்டுத்தாபனம் செலுத்த வேண்டும் என்று லண்டனிலுள்ள நீதிமன்றம் ஒன்று வழங்கிய தீர்ப்பின்படி அந்த தொகையையும் மக்களே செலுத்த நேரிட்டுள்ளனா.

இதுதவிர அரச கணக்காய்வாளர் திணைக்களம் மற்றும் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஆகியவற்றின் ஊடாக கண்டறியப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் பாரிய நிதி மோசடிகள் காரணமாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் 7 தசம் 5 பில்லியன் ரூபா கடன் சுமையை எதிர்நோக்கியுள்ளமை தெரியவந்துள்ளதாகவும்.

அத்துடன், 2018 ஆம் ஆண்டில் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை அம்பாந்தோட்டையில் நடாத்துவதற்காக பில்லியன் கணக்கான ரூபாய் செலவிடவுள்ள திட்டமும் பொறுப்பின்றி மக்கள் பணத்தை பந்தயம் கட்டும் அரசாங்கத்தின் செயற்பாடுகளின் மற்றுமொரு கட்டமாகும் என்று கரு ஜயசூரிய தெரிவிக்கின்றார்.

இத்தகைய நிலைமையில் எதிர்காலத்தில் உருவாகுகின்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழ் மக்கள் பணத்தை சூதாட்டத்திற்கு பயன்படுத்திய அனைவரும் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக்கூற வேண்டும் என்பதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# குடிவரவு,குடியகல்வு திணைக்களத்தின் கிளை அலுவலகம் வவுனியாவில்

(கொழும்பு)

குடிவரவு- குடியகல்வு திணைக்களத்தின் கிளை அலுவலகமொன்றை வவுனியா மாவட்ட செயலகத்தில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பிரதேச மக்கள் கடவுச் சீட்டுக்காக கொழும்பிற்கு செல்லாது வவுனியாவிலேயே அதனைப் பெற்றுக் கொள்வதற்கு வழியேற்படும் என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

உதவி ஆணையாளர் ஒருவரின் கீழ் இயங்கவுள்ள குடிவரவு - குடியகல்வு கிளை அலுவலகத்தின் ஊடாக, வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த மக்கள் கடவுச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

# தூத்துக்குடி,கொழும்பு பயணிகள் கப்பல்சேவை எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லையாம்

(கொழும்பு)

பெரிய அளவில் விளம்பரப்படுத்தப்பட்ட தூத்துக்குடி-கொழும்பு பயணிகள் கப்பல்சேவையானது எதிர்பார்த்தளவு வெற்றியைத் தரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

1044 பயணிகளை ஏற்றிச் செல்லும் கொள்திறனைக் கொண்ட "ஸ்கொற்றியா பிறின்ஸ்" என்ற பயணிகள் கப்பல் கடந்த யூன் 13ம் திகதியிலிருந்து தனது சேவையைத் தொடங்கியது.

ஆனால் வாரத்தில் இரு தடவைகள் பயணத்தை மேற்கொள்ளும் இக்கப்பல் தனது பயணத்தின் போது ஒவ்வொரு தடவையும் 150 பிரயாணிகளைக் காவிச் செல்வதில் கூட மிகவும் சிரமப்படுகின்றது.

இக்கப்பற் சேவையானது தனது ஒட்டுமொத்த கொள்திறனில் 15 சத வீதத்தை மட்டுமே நிரப்புவதனால் இதனைத் தொடர்ந்தும் நடாத்துவதில் எந்தவொரு சாத்தியப்பாடுகளும் இல்லை என தூத்துக்குடித் துறைமுகத்தில் கடமையாற்றும் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதுஎவ்வாறிருப்பினும் இக்கப்பற் சேவையை இயக்குபவர் இது தொடர்பாக மிகவும் தன்னம்பிக்கையுடன் உள்ளார்.

"இக்கப்பல் சேவையில் பயணிப்பவர்களில் 60 வீதமானவர்கள் வர்த்தகர்களாவர். இவர்கள் பெரும்பாலும் புடைவைகள், மற்றும் ஏனைய வர்த்தகப் பொருட்களைத் தம்முடன் கொண்டு வருகிறார்கள். நாங்கள் மெது மெதுவாக எமது எதிர்பார்ப்பை அடைந்து வருகிறோம். தற்போது இக்கப்பல் சேவை தொடர்பான வர்த்தக வாய்ப்புநிலை பற்றிய கருத்தைத் தெரிவிப்பதென்பது மிகவும் கடினமானதாகும். ஏனெனில் நாம் தற்போது தான் இதனை ஆரம்பித்துள்ளோம். இது தொடர்பாகக் கூறுவதற்குக் காலம் உள்ளது" என இது தொடர்பாகப் பேசவல்ல ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவிற்கு வந்ததையடுத்து, இந்தியாவிற்கான கப்பற் பயண சேவையை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டது.

இது தொடர்பான சாத்தியப்பாடுகளை ஆராய்வதற்காக இந்திய மத்திய அரசுப் பிரதிநிதிகள், கப்பற்துறை அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கிய உயர்மட்டக் குழுவொன்று கொழும்பிற்குச் சென்றனர்.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் இவ்வாறானதொரு கப்பற் பயணிகள் சேவையானது மிகவும் தேவைப்பாடுடைய ஒன்றாகும் என ஐ.நா ஆய்வறிக்கை ஒன்றில் அண்மையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் இரண்டாம் கட்டமாக இராமேஸ்வரம்-தலைமன்னார் கப்பற்சேவை ஒன்றை ஆரம்பிப்பதென இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

# படையினர் மீது போர்க்குற்றச்சாட்டு 3அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சி

## என்கிறது திவயின

(கொழும்பு) .

இராணுவத்தினர் மீது போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு மூன்று அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சி மேற்கொண்டுள்ளகவும் எனினும், இந்த முயற்சி தோல்வியடைந்துள்ளதாகவும் திவயின தெரிவித்துள்ளது.

2011ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு புதிய பிரகடனம் ஒன்றை அறிவித்துள்ளது. எனினும், இந்தப் பிரகடனத்தின் கீழ் கடந்த காலச் சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பில் இந்தப் பிரகடனத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு குறித்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.


வைத்தியசாலைகள் மீது தாக்குதல் நடத்துதல், சம்பந்தப்பட்டவர்களை பெயரிடுதல் போன்ற விடயங்கள் புதிய பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நெருக்கடிக் குழு, அனைத்துலக மன்னிப்புச் சபை மற்றும் நாடு கடந்த தமிழீழ இராச்சிய அமைப்பு ஆகியன இவ்வாறு அரசாங்கத்திற்கும் படையினருக்கும் எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு அமைப்பினால், பாதுகாப்புச் சபைக்கு சனல்4 காணொளி தொடர்பில் அறிவிக்கப்பட்டிருந்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் அம்பலமானதன் பின்னர் தமக்கும் இந்த முறைப்பாட்டிற்கும் தொடர்பில்லை என சிறுவர் பாதுகாப்பு சபையின் பிரதிநிதி ராதிகா குமாரசுவாமி தெரிவித்துள்ளார் என செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


முதல் இரு உருவகங்களிலும் உள்ள எண்கோலத்தை நன்கு அவதானித்து மூன்றாவதாகத் தரப்பட்ட உருவில் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணுக்குரிய விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

31.




1) 110
2) 80
3) 125

32.




1) 10
2) 15
3) 20

33.



1) 24
2) 14
3) 22

34.



1) 47
2) 77
3) 49

35.



1) 125
2) 625
3) 225

முதலாவதாகத் தரப்பட்டுள்ள வாக்கியத்தை நன்கு விபரிக்கும் விடையின் கீழ்க் கோடிடுக.

36. "பாத அணிகளைக் காலிலே அணிகின்றோம்"
1. கையால் நடப்பதில்லை
2. காலில் அணிவது இலகு
3. சுவாச நோய்கள் வரலாம்
4. பாதம் தான் தேய்வடையும்

37. "தாய் சொல்லைத் தட்டாதே"
1. தாய் சொல் கேட்க வேண்டும்
2. தாய் வார்த்தையை மதிக்கக்கூடாது
3. தாயை நன்கு ஏச வேண்டும்
4. எல்லாமே தவறான விளக்கம்

38. "புகைத்தல் உடல் நலத்துக்குக் கேடாகலாம்"
1. புகைப்பது நாகரிகம்
2. புகைப்பது உடலுக்கு உறுதி
3. சுவாச நோய்கள் வரலாம்
4. சுறுசுறுப்பாக இருக்கலாம்

39. "எங்கள் அதிபர் மேடையில் நின்று பேசும் போது குண்டூசி விழுந்தாலும் சத்தம் கேட்கும்"
1. அதிபர் மிக மெதுவாகப் பேசுகிறார்
2. குண்டூசி விழும் ஒலி மிகப்பெரியது
3. கூட்டத்தில் எவரும் இல்லை
4. எல்லோரும் அமைதியாக உள்ளனர்

40. "முற்றத்தில் உள்ள மாமரத்தின் கீழ் ஈரமாக இருந்தது"
1. மழை பெய்துள்ளது
2. நிழல் காரணமாகலாம்
3. நீர் ஊற்றப்பட்டிருக்கலாம்
4. மழை பெய்யவில்லை



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011
பகுதி - I
நேரம் -45 நிமிடம்
கல்வி முரசு
வெளியீடு 24
இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.



ஒரு கலவன் பாடசாலையில் ஒருவார தினவரவுக்குறிப்பு வருமாறு

| | மொத்த மாணவர் தொகை | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|---|
| பெண்கள் | 24 | 20 | 18 | 23 | 24 | 19 |
| ஆண்கள் | 26 | 24 | 26 | 25 | 26 | 23 |

சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. இந்தத் தரவில் இருந்து அறிய முடியாத தகவல்
1. மாணவர் வரவு
2. மாணவர் ஒழுக்கம்
3. மாணவர் கல்வி நிலை

02. இத்தரவில் இருந்து எடுக்கக் கூடிய முடிவு
1. ஆண் பிள்ளைகள் நேரகாலத்திற்கு வருகிறார்கள்
2. பெண் பிள்ளைகளைவிட ஆண் பிள்ளைகள் வரவு ஒழுங்கு நன்று
3. இதன்படி எதுவுமே கூறமுடியாது

03. கலவன் பாடசாலை என்பது
1. ஆண் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை
2. பெண் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை
3. ஆண், பெண் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை

04. இப்பாடசாலையில் மாணவர் யாவரையும் ஒன்றாக்கி வாராந்தக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்த நாள் எது?
1. திங்கள்
2. வியாழன்
3. வெள்ளி

05. இப்பாடசாலை மாணவி ஒருத்தி ஒரு நாள் பாடசாலை வரும்போது ரூபா 100 காசைக் கண்டெடுத்தாள். அவளது சக மாணவிகள் அவளுக்குக் கூறிய ஆலோசனைகளில் மிகவும் பொருத்தமானது.
1. பணத்தை சமமாகப் பங்கிட்டு ஐஸ்கிறீம் வாங்குவோம்
2. பாடசாலைக்கு நன்கொடையாக வழங்குவோம்
3. அதிபர் அல்லது ஆசிரியரிடம் ஒப்படைக்க முயற்சி செய்வோம்

06. இவ்வாரத்தில் வருகை தந்த ஆண்பிள்ளைகளுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் இடையிலான வித்தியாசம்
1. 124 - 104
2. 104 - 124
3. 150 - 128

**வீதியோரத்தில் விற்கப்படும் உணவுப் பொருட்களை நாம் வாங்கி உண்ணக்கூடாது என்பதற்கு உகந்த காரணங்கள் 4 இனைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது மீண்டும் எழுதுக.**

- ★ உணவு சுவையற்று இருக்கும்
- ★ உணவை சமைத்தவர் அழகற்றவராக இருப்பார்
- ★ உணவில் ஈ, கொசு என்பன மொய்க்கும் வாய்ப்பு உண்டு
- ★ வீதியோர உணவை சமைத்தவர்கள் பொதுவாக ஏழைகள்
- ★ உணவில் பூச்சிகள் முட்டைகள் உட்புகுந்திருக்கலாம்
- ★ உணவில் தூசு, வேறு அழுக்குகள் என்பன படிவடையச் சந்தர்ப்பம் உண்டு
- ★ உணவு திறந்த நிலையில் இருப்பதால் பாதுகாப்புக் குறைவானது

07. ..............................................................................................................

08. ..............................................................................................................

09. ..............................................................................................................

10. ..............................................................................................................

**சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

11. நான்கு மனிதர் நான்கு நாட்களில் ஒரு வேலையைச் செய்து முடிப்பர் எனின் ஒரு மனிதன் அவ் வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிப்பான்?

..............................................................................................

12. மூன்று குதிரைகள் மூன்று மணித்தியாலத்தில் 30 கிலோமீற்றர்கள் ஓடுமாயின் ஒரு குதிரை ஒரு மணித்தியாலத்தில் எத்தனை கிலோமீற்றர் ஓடும்?

..............................................................................................


13. வியாபாரி ஒருவர் தான் ஒவ்வொரு பொருளையும் விற்பனை செய்த பின், விற்பனை செய்த அளவைப் பின்வருமாறு குறித்தார்.

| | |
|---|---|
| மாம்பழம் |  |
| | |

இங்கு மாம்பழங்கள் 13 விற்பனையாகி உள்ளதை இப்பட வரைபு காட்டுகின்றது. இதைப்போலவே விற்பனையாகிய 31 தேசிப் பழங்களை மேலே காட்டப்பட்டுள்ளவாறு படவரைபில் குறித்துக் காட்டுக.


இரு வியாபாரிகள் தமது மாதவருமானத்தில் சேமிப்புக்கு ஒதுக்கிய பணத்தின் அளவை இவ்வரிப்படங்கள் காட்டுகின்றன. இதன்பிரகாரம் அவர்களது மாத வருமானத்தை எழுதுக.

வியாபாரி A



4000/-

வியாபாரி B



3000/-

14. வியாபாரி A யின் மாத வருமானம்

..............................................................................................

15. வியாபாரி B யின் மாத வருமானம்

..............................................................................................





**கீழ்வரும் வசனங்களைச் சரியான ஒழுங்கில் அமைக்கும்போது பந்தியொன்றினை நிர்மாணிக்க முடியும். அச்சரியான ஒழுங்கமைப்பிற்கேற்ப இலக்கங்களை இட்ட விடையின் கீழ் கீறிடுக.**

16.
1. வௌவால் பறந்து செல்லும் விலங்காகும்
2. எனவே அது முலையூட்டி விலங்காகும்
3. ஆயினும் அது குட்டி ஈன்று பால் கொடுக்கும்
4. அதனை இரவில் அவதானிக்கலாம்

1) 1, 3, 2, 4 2) 3, 1, 2, 4 3) 1, 2, 3, 4

17.
1. பெருமளவு தொடர்ந்து பெய்தது
2. மக்கள் குடியிருப்புக்கள் எல்லாம் அழிந்து போயின
3. எங்கும் ஒரே வெள்ளக் காடாகக் காட்சி தந்தது
4. வானம் கறுத்தது இடி முழங்கியது

1) 1, 3, 2, 4 2) 3, 1, 2, 4 3) 1, 2, 3, 4

18.
1. ஆழமான கருத்துக்களைக் கொண்டது ஆகும்
2. அவர் திருக்குறள் என்னும் நூலை இயற்றினார்
3. திருவள்ளுவர் மிகச் சிறந்த புலவர்
4. திருக்குறள் ஈரடிகளைக் கொண்டது

1) 1, 3, 2, 4 2) 3, 1, 2, 4 3) 1, 2, 3, 4

**கீழேயுள்ள படங்களில் சில பகுதி விடுபட்டுள்ளது. விடுபட்ட பகுதிக்குப் பொருத்தமான படத்தைத் தரப்பட்ட விடையில் இருந்து தெரிவு செய்து கோடிடுக.**

19. 

(1) (2) (3) (4)

20. 

(1) (2) (3) (4)

**மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.**

21. கீழ்வருவனவற்றில் வித்தியாசமாக உணவுண்ணும் பழக்கமுடையது
   1. யானை 2. பாம்பு 3. புலி 4. முயல்

22. 1. சித்தியடைதல் II. விண்ணப்பித்தல் III. பரீட்சை எழுதுதல் IV. கற்றல் என்பதன் சரியான ஒழுங்கு
   1. I, II, III, IV 2. IV, III, II, I 3. IV, II, III, I 4. II, III, I, IV

23. வித்தியாசமான சேர்மானம்
   1. வெப்பமானி - சூடு 2. மழைமானி - மழை 3. அளவுநாடா - நீளம் 4. அடுப்பு - சூடு

24. பாதம் உடல் : அரும்பு
   1. கிளை 2. மரம் 3. வளர்ச்சி 4. இலை

25. காலையில் எழுந்த குமார் முகம் கழுவி.............................................அருந்தினார்
   1. தேநீர் 2. தேனீர் 3. தேன்நீர் 4. தேயிலைநீர்

26. நேரத்தை உணர்த்தும் மலர்
   1. செவ்வந்தி 2. ரோசா 3. சூரியகாந்தி 4. பருத்தி

27. எல்லா முகங்களும் எப்பொழுதும்..............................சமமான பரப்பளவுகளைக் கொண்ட உருவம்
   1. உருளை 2. கனவுரு 3. கோளம் 4. சதுரமுகி

28. தம்பியிலும் அண்ணா எப்பொழுதும்.......................கூடியவராக இருப்பார்
   1. அறிவு 2. பலம் 3. வயது 4. பணம்

29. வித்தியாசமான சொல்
   1. எழுத்து 2. சொல் 3. வாக்கியம் 4. இலக்கம்

30. வரனிடம் ரூபா 16 உள்ளது. அதன் அரைப்பங்கை அவனது அக்கா சாயிக்குக் கொடுத்தான். சாயி தனக்குக் கிடைத்ததன் காற்பங்கை வரனிடம் கொடுத்தாள். இப்போது வரனிடம் உள்ள பணம்.
   1. ரூபா 10 2. ரூபா 8 3. ரூபா 2 4. ரூபா 14

# எதிரிகளை காட்டிக்கொடுக்கும் கண்ணாடி



பெண்களின் பேச்சை பெரும்பாலான நேரம் புரிந்து கொள்ள முடியாது. நண்பன் என்று நம்பிக் கொண்டிருப்பவர் பக்கத்திலேயே குழி வெட்டிக் கொண்டிருப்பார் இது போன்ற சூழ்நிலையை எதிர்கொண்டு எச்சரிக்கும் மூக்கு கண்ணாடியை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர் மூளை மற்றும் நரம்புகளின் ஒருவித பாதிப்பு ஆட்டிசம் எனப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றவர்களுடன் நெருங்கி பேச முடியாமல், பழக முடியாமல் சிரமப்படுவார்கள். சமூகத்தில் இருந்து சற்று விலகியே இருப்பார்கள்.

மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள், பேச வருகிறார்கள் என்பதை அவர்களால் சட்டென்று புரிந்து கொள்ள முடியாது. இந்தக குறைபாட்டை நீக்கும் வகையில் அமெரிக்காவின் மசாசூசட்ஸ் மாநில தொழில்நுட்ப கல்லூரி (எம்.ஐ.டி) தொடர்ந்து ஆய்வு நடத்தி வருகிறது தற்பொழுது அவர்கள் எக்ஸ்ரே மூக்கு கண்ணாடியை உருவாக்கி வருகின்றனர். இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறுவதாவது: நமது மூளை நன்றாக செயல்படும் பட்சத்தில் அடுத்தவர்களின் முக பாவத்தை வைத்து என்ன நினைக்கிறார்கள் என்பதை கண்டறிய முடியும்.

ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்களால் இவ்வாறு உணர முடியாது. அவர்களுக்கு வசதியாக மூக்கு கண்ணாடியை உருவாக்கி வருகிறோம். இதில் அரிசி அளவே உள்ள கமெரா பொருத்தப்பட்டுள்ளது. இது பாக்கெட் அளவு கணணியுடன் (பிராசசர்) இணைக்கப்பட்டிருக்கும் . மனிதர்களின் 24 விதமான முக பாவங்கள் இதில் பதிவு செய்யப்பட்டிருக்கும். ஒருவருடன் பேசுகிறோம் என்றால் இந்த எக்ஸ்ரே கண்ணாடியை அணிந்து கொள்ள வேண்டும். அவரது முகத்தில் ஏற்படும் சிறு அசைவுகள், சுருக்கங்கள் ஆகியவற்றை கண்ணாடியில் இருக்கும் கமெரா கண்காணித்துக் கொண்டே இருக்கும். நேரில் எதிராளி சிரித்தாலும்கூட அவரது முகத்தில் ஏற்படும் துல்லிய அசைவுகளை வைத்து அவரது மனோபாவத்தை பிராசசர் கணக்கிடும் அவரிடம் பாசிட்டிவ் உணர்வுகள், முகபாவங்கள் தென்பட்டால் கண்ணாடியின் உள் பகுதியில் இருக்கும் சிக்னலில் பச்சை விளக்கு எரியும். தொடர்ந்து பேசலாம், ஆபத்தில்லை என்று புரிந்துகொள்ளலாம்.

அவர் நமக்கு ஆதரவானவர் அல்ல என்றாலோ, இனிக்க இனிக்க பேசி வேட்டு வைக்கிறார் என்றோ தெரியவந்தால் இந்த சிக்னலில் மஞ்சள், சிவப்பு விளக்கு எரியும். உஷாராகி பேச்சை நிறுத்திக் கொள்ளலாம். எதிராளி எந்த நோக்கத்தில் பேசுகிறார் என்பதை நன்கு புரிந்துகொள்ள முடியும். உஷாரா பேசு என்று பிரத்யேக ஸ்பீக்கர் மூலம் காதுக்குள் எச்சரிக்கு மாறும் வடிவமைத்துக் கொள்ளலாம் கண்ணாடி வடிவமைப்பு பணிகள் ஏறக்குறைய முடிந்துவிட்டது. தற்போதைய அளவில் கண்ணாடி 64 சதவீதம் வெற்றிகரமாக செயற்படுகிறது. உரிய மாற்றங்கள் செய்த பிறகு கண்ணாடி அறிமுகமாகும்.

# 80 கிலோ இராட்சத கட்டியுடன்



வியட்னாம் நாட்டைச் சேர்ந்தவர் nguyen duy hai. வயது 31. இவரது வலது காலில் 80 கிலோ எடை உடைய கட்டி. கடந்த 30 வருடங்களாக இக்கட்டி வளர்கின்றது. இதனால் 14 வருடங்களுக்கு முன்னர் இவரது வலது கால் வெட்டப்பட்டது. ஆனால் அறியாமை, வறுமை, அசிரத்தை காரணமாக இவரது குடும்பத்தினர் கட்டியை கவனிக்க தவறி விட்டனர்.

இவரால் தற்போது உட்காரவும், படுக்கவும்தான் முடிகின்றது. எழும்ப முடியாது. 61 வயதுத் தாயின் பராமரிப்பில் உள்ளார். ஆனால் இவருக்கு ஏற்பட்டு இருப்பது புற்று நோய் அல்ல. மரபணு குழப்பத்தால் ஏற்பட்டு இருக்கின்ற நோய். ஆனால் எப்போது பார்த்தாலும் முறுவல் பூத்த முகத்துடன் காணப்படுகின்றார். சத்திர சிகிச்சை மேற்கொள்கின்றமைக்கு மனிதாபிமானிகள், தொண்டர் அமைப்புக்கள் ஆகியவற்றின் நிதி அன்பளிப்புக்களை கோரி உள்ளார்.

# வினோதமான சவ அடக்கம்




தீபெத்தியர்கள் இறந்த பிறகு அந்த உடலை ஒரு வெள்ளைத் துணியில் சுற்றி 3 முதல் 5 நாட்கள் வீட்டின் முலையில் வைக்கிறார்கள். கழுகுகள் அதிகம் நிறைந்த பகுதியான ஜீனிபர் என்ற இடத்தில் அந்த உடலை கொண்டு வந்து துண்டு துண்டாக அறுத்து கழுகுகளுக்கு இரையாக்குகிறார்கள். பிறகு எலும்புகளை எடுத்துச் சென்று எரித்து சாம்பலை காற்றில் கலக்க விடுகிறார்கள். இவ்வாறு செய்வதன் மூலம் அந்த ஆத்மா பாவத திலிருந்து விடுதலை பெறுவதாகக் கூறுகிறார்கள்.





# உயரமான நீர்வீழ்ச்சி



ஜிம்பாப்வே நாட்டில் உள்ள Zambeze நதிக்கரையில் தான் இந்த விக்டோரியா நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. இந்த நீர்வீழ்ச்சி 1.7 கிலோ மீற்றர் நீளமும் 120 அடி உயரமும் கொண்ட நீர்வீழ்ச்சி ஆகும்.

செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை இந்த நீர்வீழ்ச்சியில் தண்ணீரின் அளவு குறைவாக இருப்பதால் மலையின் விளிம்பில் மக்கள் நீச்சல் அடிக்கிறார்கள். 1855 ஆம் ஆண்டு டேவிட் என்பவர் விக்டோரியா மகாராணியை கௌர வப்படுத்தும் விதமாக அவருடைய பெயரை சூட்டினார்.

# தொங்கும் ஆலயம்



சீனாவில் உள்ள Shanxi என்ற மாகாணத்தில் உள்ள குன்றின் மேல் இந்த ஆலயம் கட்டப்பட்டுள்ளது. தரையிலிருந்து 246 அடி உயரத்தில் இந்த தொங்கும் ஆலயம் அமைந்துள்ளது.

Datong என்ற நகரத்தின் முக்கியமான சுற்றுலா தளங்களில் இந்த தொங்கும் ஆலயமும் ஒன்றாகும். 1500 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பௌத்த ஆலயம் ஆகும். செங்குத்தான மலைப் பாறையில் வடிவமைக்கப்பட்ட இந்த ஆலயம் மலைச் சரிவின் துவாரங்கள் மூலம் பொருத்தப் பட்டுள்ளது.

# உடல் நலனை கண்காணிக்க இலவச மென்பொருள்

எல்லோருமே நலமுடனும் நல்ல ஆரோக்கியத்துடனும் நீண்ட நாட்கள் வாழவேண்டும் என்பதே அனைவரதும் ஆசை. நலமுடன் வாழ உங்கள் உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டும். நாளாந்தம் உங்கள் உடல் நலனை கண்காணித்து பதிவு செய்து உங்கள் உடல் நிலை முன்னேற்றத்தை அறிந்து கொள்ளவும், வைத்திய தேவைகளுக்கு சமர்பிக்கவும் MY DAILY READING என்ற இலவச மென்பொருள் உதவுகிறது. இந்த மென்பொருளின் மூலம் இரத்த அழுத்தம், இரத்தத்தில் சக்கரையின் அளவு, உங்கள் நிறை என்பவற்றை கால அட்டவணைப்படி பதிவு செய்து ஓர் அறிக்கை வடிவிலோ அல்லது வரைபடம் மூலமாகவோ பிரிண்ட் செய்து கொள்ள முடியும். இதன் மூலம் மருத்துவரிடம் உங்கள் உடல் நிலை பற்றி அறிந்து கொள்ள உதவியாக அமைகிறது. இந்த மென்பொருளில் பல பயனாளர்கள் பயன்படுத்த முடியும். அத்துடன் ஒருநாளைக்கு எத்தனை தடவை வேண்டுமானாலும் பதிவுகளை மேற் கொள்ள முடியும். விண்டோஸ் இயங்கு தளங்களில் இந்த மென் பொருள் செயற்படும். தரவிறக்க சுட்டி:- http://www.rclarsen1128. com/download. htm


கணினி மூலை

# ஆரம்பக் கல்வியின் தரத்திலேயே இந்தியாவின் எதிர்காலம் தங்கியுள்ளது

## அப்துல் கலாம் தெரிவிப்பு

(சென்னை)

**ஆரம்பக் கல்வியின் தரத்தைப் பொறுத்தே இந்தியாவின் எதிர்காலம் அமையும் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தெரிவித்தார்.**



ராஜஸ்தான் மாநிலம் உதயபூரில் உள்ள பாடசாலை ஒன்றில் நடைபெற்ற கருத்தரங்கில் மாணவர்களுடனான கலந்துரையாடலில் பங்கேற்றார். அப்போது அப்துல் கலாம் கூறியதாவது: ஆரம்பக் கல்வியை ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படை உரிமையாக மாற்ற வேண்டும். படைப்பாற்றல் திறனை வளர்க்கும் வகையில் ஆரம்பக் கல்வியை மாற்றி அமைப்பதில் ஆசிரியர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. மேலும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையிலும் குழந்தைகளை வளர்க்க வேண்டும். குழந்தைகள் அனுபவித்துப் படிக்கும் வகையிலும், தங்களை முழுவதுமாக அதில் ஈடுபடுத்திக் கொள்ளும் வகையிலும் பாடத் திட்டம் இருக்க வேண்டும்.

மேலும் இலட்சியத்தை அடைவதற்கு மிகவும் அடிப்படையான நேர மேலாண்மை குறித்து குழந்தைகளுக்கு கற்றுத்தருவது அவசியம். அதன்படி சிறு வயதிலேயே ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோளை ஏற்படுத்தி குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அவற்றை அடைவதற்கான ஊக்கத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்த கலந்துரையாடலின் போது பயங்கரவாதம், ஊழல், இந்திய-பாகிஸ்தான் உறவு ஆகியவை குறித்து மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்கு கலாம் பதிலளித்தார்.

இந்தியச் செய்திகள்

## தி.மு.க. கூட்டணி குறித்து தமிழக காங்கிரசில் குழப்பம்

(சென்னை)

நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவதா அல்லது தனித்து போட்டியிடுவதா என தமிழக காங்கிரஸ் கட்சி குழப்பத்தில் உள்ளது தனித்து களம் காணும் முயற்சியில் கட்சித்தொண்டர்கள இறங்கியுள்ளனர். நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து 63 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி தி.மு.க. மீது உள்ள வெறுப்பில் காங்கிரசாரையும் புறக்கணித்தனர். தேர்தலில் காங்கிரஸ் கட்சி 5 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது.

# முன்னாள் அமைச்சர் பாலு மீது முந்திரித்தோட்ட அபகரிப்பு புகார்

(சென்னை)


புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு விவசாயிக்கு சொந்தமான 21 ஏக்கர் முந்திரி தோட்டத்தை அபகரித்துவிட்டதாக முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு மீது புதுக்கோட்டை மாவட்ட அதிகாரியிடம் விவசாயி ஒருவர் புகார் கொடுத்துள்ளார். இது தி.மு.க வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகம் முழுவதும் தி.மு.க வினர் மீது நில அபகரிப்பு புகார்கள் கட்டப்பஞ்சாயத்து குறித்து பொலிஸாரிடம் புகார் மனுக்கள் குவிந்த வண்ணம் உள்ளது.

முன்னாள் தி.மு.க அமைச்சர்கள் வீரபாண்டிஆறுமுகம், பொன்முடி, கே.என்.நேரு உள்ளிட்ட தி.மு.க தலைவர்கள் மீதும் நிலஅபகரிப்பு புகார்கள் கொடுக்கபட்டுள்ளது. இந்த நிலையில் முன்னாள் மத்திய அமைச்சரும். தி.மு.க உறுப்பினருமான டி.ஆர்.பாலு மீது நிலஅபகரிப்பு புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

# கட்சி நலனுக்காக பதவி விலகத்தயாராம் கருணாநிதியின் அறிவிப்பால் பரபரப்பு

(சென்னை)



தி.மு.க.ஸ்டாலினை தி.மு.க செயல் தலைவராக்கினால் கடும் விளைவுகள் ஏற்படும் எனக் கருதி கட்சியின் நலனுக்காக தானே பதவி விலகத் தயாராக இருப்பதாக தி.மு.க தலைவர் கருணாநிதி அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தினார். கோவை சிங்காநல்லூரில் நேற்றுமுன்னதிம் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் ஸ்டாலினை செயல் தலைவராக்க வேண்டும் என மூத்த தலைவர்களான பொன்முடி, வேலு ஆகியோர் வலியுறுத்தினர் இதையடுத்து எழுந்த அழகிரியின் ஆதரவாளர்கள் அந்தப் பதவியை அஞ்சா நெஞ்சன் அழகிரிக்கே வழங்க வேண்டும் என குரல் எழுப்பினர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அப்போது இடைமறித்த மத்திய இணையமைச்சர் பழனி மாணிக்கம், நாம் கட்சியின் வளர்ச்சி பற்றி பேச வந்த இடத்தில் அடுத்த செயல் தலைவர் யார் என்று பேச வேண்டிய அவசியம் இல்லை என்று கூறினார்.

ஸ்டாலின், அழகிரி ஆதரவாளர்கள் தொடர்ந்து தங்களது கருத்தை முன் வைத்துப் பேசவே ஆத்திரமடைந்த தி.மு.க தலைவர் கருணாநிதி, கட்சியின் எதிர்காலத்துக்காக நானே பதவி விலகுகிறேன் என்று அறிவிக்கவே அனைத்துத் தரப்பினரும் அமைதியாகியுள்ளனர்.

# நடிகர் மம்முட்டியின் வீட்டில் இன்று மீண்டும் சோதனை

(சென்னை)

நடிகர் மம்முட்டியின் வீட்டில் வருமான வரித்துறையினர் மீண்டும் இன்று சோதனை நடத்தியுள்ளனர். பெங்களூர் உள்ளிட்ட நகரங்களில் உள்ள நடிகர் மம்முட்டி மற்றும் மோகன்லால் ஆகியோரின் வீடு மற்றும் அலுவலகங்களில் இரண்டு நாட்களுக்கு முன் வருமான வரித்துறையினர் அதிரடி சோதனை நடத்தினர். இதில் நடிகர் மம்முட்டியின் வீட்டில் இருந்து எடுக்கப்பட்ட 22 லட்ச ரூபாவிற்கு வருமான வரித்துறையினர் கணக்கு கேட்டுள்ளனர். இது குறித்து கூறிய நடிகர் மம்முட்டி உரிய ஆவணங்கள் முறைப்படி சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்துள்ளார். இதனையடுத்து மம்முட்டி வீட்டில் இன்று மீண்டும் சோதன நடத்த வருமான வரித்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

# அடம்பனில் புதுமையான பசுமைப்புரட்சி



திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் இருந்து சுமார் 5கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள அடம்பன் கிராமத்தில் ஓசைப்படாமல் நடக்கின்றது ஒரு புதுமையான பசுமைப் புரட்சி

கடந்த பலவருடகால யுத்த நெடியை சுகந்தமாக்குகிறது அங்கே துரிதமாக உருவாகி வரும் அடம்பன் பண்ணை எனப் பெயரிடப்பட்டுள்ள சுய தேவைப் பூர்த்தி நிலையம். தனியார் முயற்சியாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப்பண்ணை ஒரு வருட காலத்தினுள் மிகப் பெரும் வளர்ச்சியைக்கண்டு வருவது பாராட்டுக்குரியதே.

கோழிப்பண்ணை, ஆட்டுப் பண்ணை, மாட்டுப்பண்ணை எனக் கேள்விப்பட்ட நம்மவர்க்கு, நன்நீர் மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, காடை வளர்ப்பு எனப் புதிய விடயங்களும் அங்கு அறிமுகம் செய்யப்படுவது அசத்தலானதே.

வாழை வகைகள், விதம் விதமான கீரை வகைகள், என ஆரம்பிக்கும் இப் பண்ணையில் பீற்றூட், கரட் உட்பட சகலவிதமான மரக்கறி வகைகளும் பயிரடப்படுகின்றன. வெங்காயம், ராசவள்ளி,



மரவெள்ளி என நிலக் கீழ் பயிர்களுடன் சோளம், நெல், பயறு, உளுந்து, கௌப்பி எனத் தானிய வகைகளும் பயிரடப்படுகின்றன. இறைச்சிக் கோழி, முட்டைக்கோழி, நாட்டுக் கோழி என்பவற்றுடன் வான் கோழி, கினிக்கோழி, வாத்து, தாரா என்பனவும் பண்ணைக்கு மேலும் மெருகூட்டுகின்றன.

ஒன்றின் கழிவில் இருந்து மற்றயதன் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டே இப் பண்ணை ஆரம்பிக்கப்படுவதாகவும் ஒன்றை ஒன்று சுழற்சி முறையில் பயன்படுத்துவதே எமது தாரக மந்திரம் எனவும் தெரிவித்தார் இதன் ஆரம்ப பணிகளில் ஈடுபட்டுள்ள சுவிற்சிலாந்தில் வசிக்கும் இலங்கைத் தமிழரான உருத்திரமூாத்தி.

உமி, குப்பை போன்றவறறில உரம் தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள இப் பண்ணை சுற்றுச் சூழல் பாதுகாப்பு விடயத்தில் மிகக் கவனம் கொள்வது மகிழ்ச்சி தருவதாக உள்ளது. இரசாயனக் கிருமி நாசினிகளைக் குறைத்து இயற்கைக் கிருமிநாசினிகளைத் தாமே தயாரித்துப் பயன்படுத்தும் திட்டம் முன்மாதிரியாகத் தெரிகிறது.


இந்தப் பண்ணையின் ஏனைய சிறப்புக்களாக தென்னை மரத்தில் ஏறுவதற்கான கருவிகளை அறிமுகம் செய்துள்ளது, உமியை எரிபொருளாகப் பயன் படுத்திப் பாண் தயாரிக்கும் வெதுப்பகம், ஒரு சிரட்டையை மட்டுமே பயன்படுத்தி சோறு சமைக்கும் நவீன ரைஸ் குக்கர், அரைக் கிலோ விறகைப் ப்யன்படுத்தி ஒரு குடும்பத்திற்குத் தேவையான உணவைத் தயாரிக்கும் புதிய முறை அடுப்பு, முழுக்க முழுக்க மனித வலுவால் எண்ணை எடுக்கும் இயந்திரம் போன்ற நவீன கண்டு பிடிப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை பயன் படுத்துவதும் மற்றவர்களுக்கு அறிமுகம் செய்வதும் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

ஒரு புறம் காற்றாலை மூலம் நீர் இறைத்தல் நடைபெறும் அதேசமயம் மறு பக்கத்தில் காற்றாலையின் மூலம் மின் உற்பத்தி நடைபெறுகிறது.

சூரிய ஒளியில் இருந்தும் மின் உற்பத்தி பெறப்படுகின்றது. எருவில் இருந்து பயோ காஸ் உற்பத்தி, மழைநீர்ச் சேகரிப்பு என திட்டங்களை அடுக்கிக் கொண்டே போகும் அடம்பன் பண்ணையின் அமைதி அனைவரையும் கவருகிறது.

மனதுக்கு ரம்மியமாக இருக்கும் இப்பண்ணையில் சுமார் 30 பேருக்கு மேல் தற்போது வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். முழுக்க முழுக்க தனியார் முயற்சியாலான இப்பண்ணை நிர்வாகம் அப்பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி எதிர்காலத் திட்டங்கள் சிலவற்றையும் கைவசம் வைத்துள்ளார்களாம்.

மன்னார் மாவட்ட விவசாயத் திணைக்களத்தின்



அனுசரனையுடன் எதிர்வரும் ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் செயற்திறன் கொண்ட விவசாயக் கண்காட்சி ஒன்றையும் அடம்பன் பண்ணையில் ஏற்பாடு செய்து கொண்டிருப்பாதாக அறியப்படுகிறது.

இதனை ஒரு மாதிரிப் பண்ணையாகக் கொண்டு மற்றவர்கள் செயல் படுவதன் மூலம் பிரதேச வளர்ச்சி ஏற்படுவதுடன் மற்றவர்களை நம்பி வாழவேண்டிய தேவை இல்லாமல் போய் விடும் என நிச்சயம் நம்பலாம்.

உலகச் செய்திகள்

# ஆராய்ச்சிக்காக உருவாக்கப்படும் மனித விலங்கினங்கள் அழிப்பு

(சிட்னி)

மனித விந்தையும் மிருகங்களின் கரு முட்டையையும் இணைத்து புதிய உயிரினங்களை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். கடந்த 3 ஆண்டாக இந்த ஆராய்ச்சி வெளி உலகுக்குத் தெரியாமல் நடந்து வருகிறது. இது வரை 150 இற்கும் மேற்பட்ட உயிரினங்கள் இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் உயிரினங்களிலிருந்து எடுக்கப்படும் மூல உயிரணுவை மனித உடலுக்குள் செலுத்தி, மனிதனுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட உறுப்புகளை உருப் பெறச் செய்வது தான் இந்த ஆராய்ச்சியின் நோக்கம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.



சட்டப்படி இத்தகைய கலப்பு உயிரினங்களை உருவாக்குவது தவறு என்பதால், இவை உருவாக்கப்பட்ட 14 நாட்களுக்குள் அழிக்கப்படுவதாகவும் இந்த கண்டுபிடிப்பு மனிதனுக்கு ஏற்படும் கொடிய நோய்களை சரிசெய்வதற்கு உதவும் என்றும் இந்த விஞ்ஞானிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் ரொபின் லோவல் பாட்ஜ் தெரிவித்தார்.

# இரு ரயில்கள் மோதி விபத்து சீனாவில் 35 பேர் உயிரிழப்பு



(பீஜிங்)

சீனாவின் கிழக்குப் பிராந்தியத்தில் இரு ரயில்கள் மோதி இடம் பெற்ற விபத்தில் 35 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹீஜியாங் மாநிலத்தில் இடம் பெற்ற இந்த விபத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந் துள்ளதாக சீன அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த பாரிய விபத்தை அடுத்து அதிவேக ரயில் வலையமைப்பின் பாதுகாப்பு குறித்து கேள் விகள் எழுத்துள்ளதாக சர்வதேச தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பாலம் ஒன்றில், அதி வேக ரயில் மற்றுமொரு ரயிலுடன் மோதியதை அடுத்து ரயில் தடம்பு ரண்டதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடு கின்றன.

குறித்த பகுதியில் மக்கள் கூடியுள்ள நிலையில் மீட்கும் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

# ஈரான் அணுவிஞ்ஞானி ஒருவர் தலைநகரில் சுட்டுக்கொலை


(தெஹ்ரான்)

ஈரானின் அணு விஞ்ஞானி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.ஈரானின் தெஹ்ரானில் உள்ள தமது இல்லத்துக்கு அருகாமையில் வைத்து இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இதன்போது இவரின் மனைவியும் காயங்களுக்குள்ளானதுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.இஸ்ரேல் மொஷாட் பிரிவினர் இந்தக் கொலையை மேற்கொண்டிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.ஈரானின் அணுத்திட்டங்களுக்கு இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பைவெளியிட்டுவருகின்றனர்.

# இந்திய - பாகிஸ்தான் பேச்சில் இரு நாட்டு உறவுக்கே முன்னுரிமை

## - பாக் வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு



(இஸ்லாமாபாத்)

இந்திய -பாகிஸ்தான் நாடுகளின் பேச்சுவார்த்தையில் இரு நாட்டு உறவுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்று பாகிஸ்தான் புதிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஹீனா ரப்பானிகர் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் அரசு தொலைக் காட்சியான பி.டி.வி.க்கு அந்நாட்டின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஹீனா ரப்பானி கர் பேட்டியளித்தபோதே இத்த கவலை வெளியிட்டார்.

பாகிஸ்தானுடன் பேச்சு நடத்துவது என்ற இந்தியாவின் முடிவு சாதகமானது என்றும் இந்தியாவுடன் அடுத்து நடக்கும் பேச்சுவார்த்தைகளின் போது இரு நாடுகளின் உறவுக்கே அதிக முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையே சமீபத்தில் நடந்த பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமான நிலையில் உள்ளன என்றும் அவர் இது திருப்தி அளிப்பதாக உள்ளது என்றும் அவர் கூறினார்.அடுத்து நடக்கும் இரு நாட்டு பேச்சுவார்த்தைகளில் எல்லா பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்படும். அதே சமயம் அந்த பிரச்சினைகளுக்கான மூல காரணங்கள் குறித்தும் விவாதிக்கப்படும் என்றும் கூறினார்.

பேச்சுவார்த்தைக்கு இந்தியா மீண்டும் வந்துள்ளதே பாகிஸ்தானுக்கு கிடைத்த வெற்றி என்றும் அவர் கூறினார்.வெளியுறவுத்துறை செயலாளர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை முன்னேற்றம் குறித்து தானும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கிருஷ்ணாவும் பேச்சு நடத்த இருப்பதாகவும் தெரிவித்தார். பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹீனா ரப்பானி வருகிற 26 ஆம் திகதி இந்தியா செல்கிறார். அதற்கடுத்த நாள் அவர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவை சந்தித்து பேச்சு நடத்த உள்ளார்.

# வேலைவாய்ப்புச் செய்திகள்

1) களுபோவில இல.59, **Hospitel Road** இல் அமைந்திருக்கும் **monoj Tailoring Centtre** இற்கு ஆட்கள் தேவை தைப்பதற்கு மாத்திரம் ஆர்வமுள்ளவர்கள் 0723345122 இற்கு தொடர்பு கொள்ளவும்.

2) நியூ மயூரா செக்குரிட்டி சேர்வஸுக்கு அனுபவமுள்ள மற்றும் அனுபமற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை தங்குமிட வசதி இலவசம் ஆர்வமுள்ளவர்கள் 69, AG.Ghinni Appu Hami Mawatha Col-13 இற்கு நேரில் வரவும் 0112 392041,0771348560,0775 733 299

3) நெற்கபே ஒன்றிக்கு அனுபவம் வாய்ந்த இயக்குநர்கள் தேவை. ஆற்றல் உள்ளவர்கள் 132,கச்சேரி -நல்லூர் வீதி யாழ்ப்பாணம் 021 222 4616 இற்கு தொடர்பு கொள்ளவும்.

4) தாதிமார்கள் (பெண்) சுத்திகரிப்பாளர்கள் உடன் தேவை ஆர்வமுள்ளவர்கள் 132,கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம். 021 222 4616 இற்கு தொடர்பு கொள்ளவும்.

5) யாழ்ப்பாணத்தில் உள்ள புடவை நிலையத்திற்கு வியாபாரம் தெரிந்தவர்களும்/பழக விரும்புவர்களும் ஆர்வமிருந்தால் 0772850753 இற்கு தொடர்பு கொள்ளவும்.

6) சிவபூமி முதியோர் இல்லத்தில் நிர்வாக அலுவலர்கள் சிற்றூழியர் வெற்றிடங்கள் உண்டு. 40-60 வயதிற்கு உட்பட்ட ஆர்வமுள்ள ஆண்கள் கல்வித்தகமை, நல்லொழுக்கச் சான்றிதழ் வேலை அனுபவம் பற்றிய விபரங்களுடன் தலைவர் சிபபூமி முதியோர் இல்லம் தொல்புரம் சுழிபுரம் என்னும் முகவரிக்கு 01-08-2011 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

7) புதிதாக ஆரம்பமாக இருக்கும் **Geath care Centre** ஒன்றிற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து பின்வரும் பணிகளுக்கு ஆட்கள் தேவை வரவேற்பாளர்கள் அழகுக்கலை நிபுணர்கள் (கற்கைநெறிபூர்த்தி செய்தவர்கள் கற்றுக் கொண்டிருப்பவர்கள்) விற்பனைப்பிரதி நிதிகள் அலுவல உதவியாளர்கள் ஆற்றலும் ஆர்வமுள்ளவர்கள் ABOORPA HEALTH CARE CENTRE No 203 Temple Road Nallur Jaffna எனும் முகவரிக்கு 05-08-.20011 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

8) பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு போதனாசிரியர்கள் தேவை கட்டட மேற்பார்வையாளர் குளிரூட்டலும் வாயு சீராக்கலும், மேசன் நீர்க்குழாய் இணைப்பு கட்டடங்களுக்கு வர்ணம் தீட்டுதல் 25 வயதிற்கு மேற்பட்ட ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் St Johns Vocational Training Centre Air Port Road Thiruperunthurai Batticaloa என்ற முகவரிக்கு 02.08.2011 இற்கு முன்னதாக சான்றிதழ் களுடன் சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும் தொலைபேசி இல.065 222 5163

9) சீமெட் வைத்திய சேவைகள் (பிறைவேட் லிமிடெட்) இற்கு சாரதி உதவியாளர்கள் தேவை 20-35 வயதிற்கு உட்பட்டவர்கள் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருந்தால் 0714535258, 0214641641 இற்கு அல்லது 514, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

10) **17, Computerws** நிறுவனத்திற்கு கணினி தொழில் நுட்பவியலாளர் தேவை. ஆற்றலும் ஆர்வமுள்ளவர்கள் 124டீ, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (இலுப்பையடிச் சந்தி அருகில்) 021 2224959, 0777683637 இற்கு தொடர்பு கொள்ளவும்.

11) **BTL LANKA (PVT) Ltd** நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பிரதேசங்களில் உள்ள அலுவலகத்திற்கு விற்பனைப் பிரதிநிகள் தேவை. ஆற்றலும் ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்கோவையை dilushi@btl. feeders.com அல்லது தொலைநகல் 0112300689 இற்கு அனுப்பி வைக்கவும்

12) வெளிநாட்டில் உள்ள கோயில் ஒன்றிற்று ஓதுவார் தேவை. திருமுறைப் பண்ணிசை அல்லது கர்நாடக சங்கீதத்தில் பட்டம் அல்லது வ.இ.ச. சபையின் ஆசிரியர் சான்றிதழ் அல்லது இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றில் சங்கீதத்தில் அல்லது திருமுறையில் பட்டம் பெற்றிருத்தல். 31.07.2011 இல் 30 வயதிற்கு உட்பட்டவராக இரந்தால் 06.08.2011 இற்கு முன்னர் இணைப்பாளர், 281/11, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

13) தெல்லிப்பழை பல.நோ.கூ. சங்கம் (வ-து) இல் சாரதி, வாகனச் சுத்திகரிப்பாளர் பதவிகளுக்கு ஆட்கள் தேவை 18-45 வயதிற்குட்பட்ட தகைமையும் ஆர்வமும் உள்ளவர்கள் அலுவலக நேரத்தில் சங்கத் தலைமையகத்தில் விண்ணப்பத்தைப் பெற்று, 01.08, 2011 ஆம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர், தெல்லிப்பழை, ப.நோ.கூ. சங்கம், தெல்லிப்பழை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

14) நல்லமுற்றையில் இயங்கிவரும் கம்பனி ஒன்றின் யாழ்.கிளைக்கு முகாமையாளர் தேவை. கணினி அறிவு, தமிழ், ஆங்கிலம் நன்கு பேச எழுதத் தெரிந்தவர்கள் ஆற்றலும், ஆர்வமும் இருந்தால் 0777562620 இற்கு தொடர்பு கொள்ளவும்.

15) வெள்ளவத்தையில் புதிதாக ஆரம்பிக்க உள்ள உணவகத்திற்கு சமையல், றொட்டி, தயாரிக்க தெரிந்தவர்கள், சுத்திகரிப்பாளர், பரிமாறுபவர்கள், ஆட்டோ சாரதி போன்ற பணிநிலைக்கு ஆட்கள் தேவை. தங்குமிடம், உணவு இலவசம். ஆற்றலும், ஆர்வமும் உள்ளவர்கள் 0779226588, 0112501327 இற்கு தொடர்பு கொள்ளவும்.

16) **Security Gurards** தேவை. கொழும்பில் தங்குமிட வசதிகளும், உணவு சமைப்பதற்கான வசதிகளும் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் மதியம் 12.30 இற்குப் பின்னர் 0772160871 அல்லது 0718280 612 இற்கு தொடர்பு கொள்ளவும்.

# உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் வெற்றிபெற்ற வேட்பாளர்களின் விருப்பு வாக்குகள்...

**நல்லூர் பிரசே சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

பரமலிங்கம் வசந்தகுமார் 3483
கோமதி ரவிதாஸ் 2910
பெரியதம்பி கனகசபாபதிபிள்ளை 2759
இராசையா இராசலிங்கம் 2689
கிட்ணர் தர்மரட்ணம் 2241
தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி 2016
நாகன் சிவலோகநாதன் 1792
தம்பிமுத்து துரைமணி 1322
சிவராசா கஜேந்திரன் 1124
சண்முகலிங்கம் சுரேஸ்குமார் 1052

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

அம்பலம் ரவீந்திரதாசன் 950
வல்லிபுரம் சிறிகணேஸ் 575

**வலி.தென்மேற்குப் பிரதேச சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

ஜெபநேசன் அந்தோனிப்பிள்ளை 2809
சண்முகம் சிவகுமாரன் 2337
ஆறுமுகம் சின்னையா கணேசவேல் 2226
விநாயகமூர்த்தி சுப்பிரமணியம் 2226
சின்னத்தம்பி மகேந்திரன் 2220
கௌரிகாந்தன் கதிரவேலு 2045
சுப்பையா பரமகுரு 1672
செல்லப்பா சிவபாதம் 1491
அருட்குமார் ஜோன்ஜிப்ரிக்கா 1427
தங்கராஜா குமணன் 1121
கனகரத்தினம் பொன்னன் 1116
மங்களநாயகம் சூசைப்பிள்ளை 1046

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

வெலிச்சோர் அன்ரன்ஜோன்சன் 2707
செல்வரட்ணம் செல்வராசா 693
கந்தையா நடராஜா 605
பாலசுப்பிரமணியம் நாகேந்திரம் 454

**நெடுந்தீவு பிரதேச சபை**

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

டானியல் றெக்சியன் 999
சுப்பிரமணியம் கோபாலசிங்கம் 631
செபஸ்தி பேதுரு அருளப்பு 627
மரியசெபஸ்தியாம்பிள்ளை அமலடொரின் 376
சின்னப்பு எட்வேட்ராசா 355
குமாரசாமி சிவானந்தன் 346
ஜயாக்குட்டி மயில்வாகனம் 261
யோகராசா லோறன்ஸ் 210

*இலங்கை தமிழரசுக்கட்சி*

அப்புக்குட்டி அந்தோனிப்பிள்ளை 88

**சாவகச்சேரி நகர சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

றொபியல் தேவசகாயம்பிள்ளை 1807
குமாரசுவாமி சதாசிவமூர்த்தி 1311
கந்தையா மயில்வாகனம் 1014
அருணாசலம் பாலமயூரன் 1103
காசிலிங்கம் சற்குணதேவன் 964
பொன்னுத்துரை செல்வரட்ணம் 763
ஞானப்பிரகாசம் கிசோர் 749
பரமசாமி சிறிதரன் 690
தனபாலசிங்கம் சுதர்சன் 454

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

சூசைமுத்து அலெக்சாண்டார் 540
நடராசா திருக்குமரன் 425

**வலிமேற்கு பிரதேச சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

நாகரஞ்சினி 5008
சிவரஞ்சன் 3103
நடநேந்திரன் 2586
சிவகுமார் 2180
கனகராசன் 1818
ஜயலிங்கம் 1747
காங்கேயநாதன் 1660
சசிதரன் 1113
ராஜகுமார் 1103
சபாநாயகம் 1036
இராசதுரை 835

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

சிவகுரு பாலகிருஸ்ணன் 808
செல்வராஜா சிறிதரன் 666
செல்லமுத்து செல்வகுமார் 592

**வலி வடக்கு பிரதேச சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

சோமசுந்தரம் சுகிர்தன் 3238
சண்முகலிங்கம் சஜீவன் 2565
அன்னபரிபூரணம் கணேஸ்வரன் 2447
செல்லத்துரை செல்வராஜா 1655
பொன்னுத்துரை தங்கராசா 1459
நடராஜா மதியழகராசா 1284
கந்தசாமி மயூரதன் 1258
வேலும்மயிலும் சண்முகநாதன் 1186
செல்லத்துரை கமலநாதன் 1172
தம்பிப்பிள்ளை நடராஜா 1157
மாரிமுத்து கதிரமலைப்பிள்ளை 1116
சிவபாலசுந்தரம் ஹரிகரன் 981
சஞ்சி தங்கராசா 974
மயில்வாகனம் சிவகுமாரன் 880
வைரவன் முருகேசு 820

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

இராசரெத்தினம் ஜெயபாலசிங்கம் 1253
செல்லப்பா திருஞானம் 993
பசுபதி உதயகுமார் 800
சுப்பிரமணியம் மணிராஜா 798
பசுபதி மதன்ராஜ் 627
முருகன் ஜயாத்துரை 535

**பருத்தித்துறை நகர சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

சபாநாயகம் ரவீந்திரன் 1976
சிதம்பரப்பிள்ளை பத்மநாதன் 1477
நடராசா நிரஞ்சன் 1390
சிவகுமார் தீபானந் 798
மதனி நெல்சன் 654
அருளம்பலம் அருள்மாதவன் 385
இராமசாமி குலசேகரம் 342

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

சிவயோகநாதன் முகுந்தன் 562
சிவக்கொழுந்து மகேந்திரன் 511

**வல்வெட்டித்துறை நகரசபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

ஆனந்தராஜ் 1436
சிவாஜிலிங்கம் 1165
சதீஸ் 771
மயூரன் 758
ஜெகதீஸ் 654
சேவியர் குலநாயகம் 458
ஜெயராசா 399

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

பொன்னுத்துரை தெய்வேந்திரன் 457
இந்திரன் கைலாஜினி 199

**வேலணை பிரதேச சபை**

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

சின்னையா சிவராஜா 2638
சின்னத்தம்பி கார்த்திகேயன் 1094
நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி 717
பரமானந்தன் தயானந்தன் 715
சோதிலிங்கம் கோபிலக்ஷன் 660
ஜெயநாயகம் ஜெயரஞ்சன் 634
பாலசிங்கம் தவபாலன் 615
சித்திரவடிவேல் ரவின்சன் 568

*இலங்கை தமிழரசுக்கட்சி*

குணரட்ணம் சிவகுலசிங்கம் 1430
முருகேசு சிவராசா 769
கந்தையா கனகரத்தினம் 677

**பருத்தித்துறை பிரதேச சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

பூபாலசிங்கம் சஞ்ஜீவன் 3486
மாணிக்கம் லோகசிங்கம் 3465
கதிரவேலு தவயோகநாதன் 2621
பொன்னையா திருச்செல்வம் 2168
நிரஞ்சன் கிருசாந்தி 1727
குமாரசிவம் பன்னீர்ச்செல்வம் 1532
இராசதுரை சிவசுப்பிரமணியம் 1178

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் 2184
தம்பிராசா மணிதரன் 620

**சவகச்சேரி பிரதேச சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

சிற்றம்பலம் துரைராஜா 6520
கணபதிப்பிள்ளை யோகராஜா 2019
ஜெகரட்ணம் சிற்சபாநாதன் 1682
சின்னப்பொடியன் இரட்ணசிங்கம் 1671
கந்தசாமி பிரதீபன் 1613
வேலன் கந்தையா 1611
இராசையா தெய்வேந்திரம்பிள்ளை 1521
கந்தையா அசோகலிங்கம் 1349
சங்கரன் தங்கராசா 1327
இராசேந்திரம் கனகி 1212
விஜயரட்ணம் எட்வின் டானியல் 1131
இராசையா மதீஸ்வரன் 1090

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

அழகையா டயஸ் இமானுவேல் 712
சதாசிவம் ஞானலிங்கம் 682

*ஐக்கிய தேசியக்கட்சி*

தெய்வகடாட்சம் புவனேஸ்வரி 941

**வலி கிழக்கு பிரதேச சபை**

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

இராமநாதன் ஐங்கரன் 2135
நாகமணி இராசநாயகம் 958
கிருஷ்பிள்ளை செல்வராசா 804
சூசைப்பிள்ளை வசீந்திரன் 754
கதிர்காமு சந்திரபோஸ் 734

**வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

பொன்னையா விஜயகேஸ் 3962
இளையதம்பி சாந்தசொருபன் 3026
பொன்னம்பலம் குகதாஸ் 3021
கந்தன் இரட்ணம் 2537
கந்தன் பரஞ்சோதி 1923
பொன்னம்பலம் கணேஸ் 1791
பொன்னன் தம்பிமுத்து 1709
ஆள்வாப்பிள்ளை மதியராசன் 1694
மயிலு சத்தியநாதன் 1460
நடராசா கந்தசாமி 1245
சீவரட்ணம் இரட்னேஸ்வரன் 1220
ஏரம்பு இராசையா 1061
முத்தையா ஜெகநாதன் 1012
கனகரட்ணம் பாலசுப்பிரமணியம் 776
சேதுலிங்கம் பால்ராஜ் 623

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

அருணாசலம் சந்திரசேகரம் 829
துரை பிரதீபன் 509
சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை 466

**வலி தெற்கு பிரதேச சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

தியாகராசா பிரகாஷ் 2811
இராசையா பரமேஸ்வரலிங்கம் 2676
றிச்சட் தவப்பிரகாசம் 2476
செல்வரட்ணம் உதயகுமாரன் 2163
நாகேந்திரம் இலட்சுமிகாந்தன் 1852
இராமலிங்கம் இராசதுரை 1525
இராசா குமாரசாமி 1499
கதிரவேலு கருணைநாயகம் 1495
அருளப்பு வில்லியம் ஜேசுதாசன் 1479
வசந்தநாதன் சிவநாதன் 1406
முத்துலிங்கம் நவலோகராஜா 1396
சந்திரசேகரம் சந்திரகுமார் 1208
ஈஸ்வரன் செல்லத்துரை 1056

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

இரத்தினசிங்கம் அரிகரன் 1336
கிருஷ்ணபிள்ளை இராசசேகரம் 754
தம்பிப்பிள்ளை தேவராஜா 673

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

மருதையினார் ஜெயகாந்தன் 2663
பரமலிங்கம் அருள்கரன் 1067
கந்தஞானி கதீஸன் 984
பெனான்டோ பெலிக்ஸ் அல்பேட் 949

*இலங்கை தமிழரசுக்கட்சி*

இராமலிங்கம் புவனேஸ்வரன் 375

**காரைநகர் பிரதேச சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

வேலாயுதம் ஆனைமுகன் 1540
சந்திரசேகரம் துர்க்கேஸ்வரன் 709
சுப்பிரமணியம் யோகேஸ்வரன் 376

*ஐக்கிய தேசியக்கட்சி*

பாலச்சந்திரன் கணேசபிள்ளை 1240

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

வீரமுத்து கண்ணன் 1393

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

வில்சன் பனல் 328
கா. சிவராஜ் 248
பேரின்பராசன் 245
ரெஜிதாசன் 169
அன்ரன் 167
பிரதீபன் 100

*ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி*

அன்ரன் அன்பழகன் 482
வயிரன் தியாகராசா 468
சின்னத்துரை சுந்தரலிங்கம் 385

**பூநகரி பிரதேச சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

தங்கேஸ்வரன் 1196
ஸ்ரெலா 1031
சிறீஸ்கந்தராசா 1000
ஜசோதரன் 959
ஆனந்தவாசன் 937
பேரின்பநாதன் 747

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

குலேந்திரராசா குகேந்திரன் 1350
அந்தோனி பியானுவேல் நோயல்ஸ் 1324
வல்லிபுரம் சந்தரலோகராசலிங்கம் 1285
இப்ராஹிம் முகமது காஷீன் 1188

**கரைச்சி பிரதேச சபை**

*இலங்கை தமிழரசுக்கட்சி*

குகராஜா 4391
நகுலேஸ்வரன் 3094
சுவீஸ்கரன் 3059
புஸ்பராஜா 2421
சிவச்செல்வன் 2347
தவபாலன் 1848
குமாரசிங்கம் 1843
தயாபரன் 1746
பென்னம்பலம் 1744
சுப்பையா 1494
செல்லத்துரை 1401
டெனிஸ்குமார் 1393
சுகந்தன் 1354
டேனியல் 1247
சேதுபதி 1191

*ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி*

சுப்பையா மனோகரன் 1296
நாகேந்திரம் சபாநாயகம் 948
பரமசாமி இராமச்சந்திரன் 875
துரைசாமி கிருஸ்ணசாமி 843

# 'பொதுவான மீன்பிடி வலயம்' நிராகரிக்கிறது இலங்கை அரசு



(சென்னை)

இந்தியா தெரிவித்திருக்கும் பொதுவான மீன்பிடி வலயங்கள் என்று வரையறை செய்வதை இலங்கை நிராகரித்திருப்பதாகவும், இரு நாடுகளுக்கும் இடையில் கடல் எல்லைகளை வரையறுக்குமாறு இந்தியாவிடம் அழுத்தம் கொடுக்கும் எனவும் இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனரட்ன நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அனைத்துலக கடற்சட்டங்களைக் கருத்திற்கொண்டு அதற்கேற்ப மீனவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் விதமாக இலங்கையானது தொடர்ச்சியான அழுத்தங்களை இந்தியா மீது பிரயோகிக்கும் எனவும் இவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதத்தில் கொழும்பில் இடம்பெறவுள்ள மீன்பிடி தொடர்பான இலங்கை-இந்தியா கூட்டு ஆணைக்குழுவின் சந்திப்பின் போது மீன்பிடி உரிமைகள் தொடர்பான விடயங்கள் முதன்மைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் சேனரட்னா தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக மீன்பிடித்துறை விவகாரங்களில் அதிகளவு கவனத்தைச் செலுத்த முடியாதிருந்ததாகவும், ஆனால் தற்போது யுத்தம் முடிவுற்றுள்ளதால் பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடாப்பகுதியில் மீனவர்களின் உரிமைகள் பாதிக்கப்படாது செயற்பட வழிவகுக்க முடியும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் பொதுவான மீன் பிடிவலயங்கள் தொடர்பான சாத்தியப்பாடுகள் ஆராயப்பட வேண்டும் என இவ்வாரம் இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் வலியுறுத்தியதைத் தொடர்ந்து இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் இக்கருத்தினை வலியுறுத்தியுள்ளார்.

நாங்கள் பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடா தொடர்பாக நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். இவை எமது இரு நாட்டுக் கடற்கரை எல்லைகளுக்கு இடையில் அமைந்துள்ள குறுகிய நீர்ப்பரப்பாகும். வரலாற்று அடிப்படையில் இவை இரு நாடுகளுக்கும் பொதுவான மீன்பிடி வலயங்களாகும் என புதுடில்லியில் இடம்பெற்ற கருத்தரங்கில் நிருபமா ராவ் இதனைத் தெரிவித்துக் கொண்டார்.

# தட்டியெழுப்பப்படும்....

தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அத்துடன், இதர சபைகளிலும் எங்களுக்கு வாக்களித்த அனைவருக்கும் எனதும் எனது வேட்பாளர்களின் நன்றிகள் உரித்தாகட்டும்

எங்களிடம் உள்ளூராட்சி சபைகளுக்கான ஆட்சி அதிகாரத்தைக் கையளித்த மக்களுக்கு ஓர் உண்மையான - நேர்மையான - ஊழலற்ற சேவையை வழங்குவோம் என நான் இத்தருணத்தில் உறுதி கூறுகிறேன். அத்துடன், நாம் அதிகாரத்தைக் கைப்பற்றத் தவறிய உள்ளூராட்சிச் சபைகளில் நாம் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாகச் செயற்பட்டு இயலுமான வரையில் அத்தொகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்ற உதவுவோம் எனவும் உறுதி கூறுகிறேன்.

நான் என்றுமே சொன்னதைச் செய்பவன் செய்வதையே சொல்பவன். வெறும் வாக்குக ளைப் பெறுவதற்காக வானத்திலிருந்து சந்திரனைக் கொண்டு வந்து தருவேன் என்று நான் வாக்குறுதிகளை அளிப்பதில்லை. எனது மக்களுக்கு அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற நான் என்றும் இதய சுத்தியுடன் முயன்றிருக்கிறேன். இயலுமான வகையில் மக்களின் அடிப்படைத் தேவைகள் பலதை நான் நிறைவு செய்தும் இருக்கிறேன். கட்சி பேதங்களுக்கு அப்பால் மக்கள் இதனை அறிவார்கள் என்பது எனக்குத் தெரியும்.

இந்தத் தேர்தலிலும் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தின் ஊடாக எமது மக்களுக்கு எம்மால் எதைச் செய்ய முடியும் என்பதைப் பற்றியே நாம் பிரச் சாரம் செய்தோம். இனவெறியையும், மொழி வெறியையும் ஊட்டி எமது மக்களின் உணர்வுகளை எழுப்பி வாக்குகளைப் பெறும் மலினமான உத்திகளில் நாம் முயன்றதில்லை. மனச்சாட்சியுள்ள எவரும் இதனை ஏற்றுக் கொள்வர். இதனையிட்டு நாம் பெருமையடைகிறோம்.

எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகளும் சுமுகமாகத் தீர இலங்கையி லுள்ள சகல இனங்களுக்கிடையிலும் ஒரு சுமுகமான உறவு நிலவவேண்டுமென்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. கடந்த கால யுத்தத்தால் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களுக்கு அப்பால் எமது மக்களுடன் உறவு களைப்பேண இலங்கை அரசு இதய சுத்தியுடன் விரும்பிவந் தது என நான் உளமார நம்பு கிறேன். இனங்களுக்கிடையிலான உறவுகளைச் சீரமைத்து அரசியல் உரிமைப் பிரச்சினை கள் உட்பட அனைத்து அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் இணக்கமான தீர்வுகண்டு, ஒரு வளமான எதிர்காலத்தை அமைக்க இலங்கை அரசு நீட்டியிருந்த இரு கரங்களையும் எமது மக்கள் இறுகப்பற்ற வேண்டுமென நான் மனமார விரும்பியிருந்தேன். எமது ஜனா திபதியினதும், அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட இதர அமைச்சர்களினதும் தொடரான வருகைகளை வரவேற்று வழிசமைத்து, இந்த எண்ணம் நிறைவேற நான் அயராது முயன்றேன். இந்தத் தேர்தலிலும் ஜனாதிபதியும், பிரதமரும், அமைச்சர் பசில் ராஜ பக்ஷ உட்பட இதர அமைச்சர்களும் பல தினங்கள் எமது மக்களுடன் வந்திருந்து அவர்களது பிரச்சினைகளைக் கேட்டு, அறிந்து உதவமுன்வர நான் மனதார உதவிசெய்தேன். ஆனால், தமிழ் இனவாத அரசியல் போலிகள் இவைகளை தமது வாக்கு வேட்டைக்காக பொய்ப் பிரச்சாரங்களாக முன்னெடுத்து தவறான கண்ணோட்டத்தை மக்கள் மத்தியில் திணித்துள்ளனர்.

நாம் சிங்களக் கட்சியில் தேர்தலில் நிற்பதாக இன வெறியூட்டப்பட்டு மக்களின் வாக்குகள் எமக்கெதிராகத் திருப்பப்பட்டன. வன்னிப் போருக்காக சிங்கள அரசை பழிவாங்க எமக்குப் பாடம் புகட்டுமாறு எமது மக்கள் இன உணர்வூட்டப்பட்டனர். 1981 யாழ் நூலக எரிப்புச் சம்பவம் போன்றதொரு அசம்பாவிதத்தை இலங்கை அரசினூடாக அரங்கேற்றி நாம் தேர்தலில் வெல்ல முயல்வதாக எமது மக்களின் இன உணர்வுகள் தட்டி எழுப்பப் பட்டன. கறைபடிந்த 83 யூலை இனக்கலவர நிகழ்வுகள் வெறும் வாக்குகளைப் பெறுவதற்காக எமது மக்களுக்கு நினைவூட்டப்பட்டன. தேர்தல் கடமைகளுக்காக தென்னிலங்கையிலிருந்து வந்திருந்த சகோதர சிங்கள ஊழியர்கள் தேர்தல் மோசடிகளுக்காகவே வரவழைக்கப்பட்டதாக எமது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இவர்களை தேர்தல் வேலைகளில் அமர்த்தக்கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பகிரங்கமாகவே கோரிக்கை விடுத்திருந்தனர். தேர்தல் பிரச்சார வேலைகளில் எமக்குதவ வந்திருந்த இலங்கை ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் ஏனைய அமைச்சர்களும் மோசடிகள் செய்து எம்மை வெல்லவைக்கவே வந்ததாக ஒரு விம்பம் தரப்பட்டது. வாக்குப் பெட்டிகளைத் திருட அல்லது மாற்ற அரசு திட்டமிட்டுள்ளதாக திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. தேர்தல் தினத்தன்று வாக்குப் பெட்டிகள் மாயமாய் மறைந்ததாக இணையத் தளங்களில் செய்திகள் வெளியிடப்பட்டன. எமது ஆளுகையிலிருக்கும் யாழ்.மாநகரசபை இதய சுத்தியுடன் சங்கிலியன் சிலையைத் திருத்த எடுத்த முயற்சிகளுக்கு இனவெறிச் சாயம் ஊட்டப்பட்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. இந்தத் தேர்தலில் எம்மை நிராகரித்து இலங்கை அரசுக்கு ஒரு பாடம் புகட்டுமாறு இறுதி யுத்தத்தில் பாதிப்படைந்த அப்பாவி மக்களின் பழிவாங்கும் உணர்வு தேர்தல் வாக்குகளுக்காகத் தட்டி எழுப்பப்பட்டது. ஜனா திபதி அவர்களையும் அமைச்சர்களையும் அழைத்துவந்து தேர்தலில் மோசடி செய்து வெல்ல முனைவதாக திரும்பத்திரும்பக் குற்றஞ் சாட்டப்பட்டது. எந்தவித பொறுப்புணர்வுமின்றி, அரச படைகளுடன் அப்பாவி மக்களையும் மாணவரையும் ஒரு மோதலுக்கு வழிசமைக்கும் அறிக்கைகள் அரசியல்வாதிகளாலும், மாணவர் அமைப்பு என்ற பெயரிலும் வெளியிடப்பட்டு பிரச்சாரம் செய்யப்பட்டது. தாம் சுதந்திரமான தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட முடியாதுள்ளது என்றும், நீதியான தேர்தல் இங்கு நடக்காது என்றும் உண்மைக்குப் புறம்பான பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. எதிர் அணியினரை வெற்றிக்குக் கொண்டுசென்ற இந்தப் பிரச்சாரங்கள் அனைத்தும் பொய்யானவை என்பதை இத் தேர்தல் நடைமுறைகளும் முடிவுகளும் இப்போது தெளிவாகத் தெரிவித்து நிற்கின்றன. மனச்சாட்சியுள்ள சகலரையும் இத்தகவல்களைச் சரிபார்த்துக் கொள்ளுமாறு கோருகிறேன்.

இந்த வகையில் எதிரணியினர் இப் பிரச்சார யுத்திகளால் வெற்றிகளை ஈட்டியிருந்தாலும் எமது மக்களை இவர்கள் தோற்கடிக்கவே செய்துள்ளனர் என்பதை பகுத்தறிவுள்ள எவரும் ஏற்றுக்கொள்வர். அந்தவ கையில் நாம் இந்தத் தேர்தலில் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெற்றிருக்காவிட்டாலும், எமது மக்களுக்கு எந்தவித இழப்புகளையும் ஏற்படுத்த வில்லை என்பதில் பெருமையடைகிறேன்.

எமக்கு ஆதரவளித்த அனை வருக்கும் எமக்கு ஆதரவாக, நல்லெண்ண நோக்கத்தோடு வருகை தந்து ஒத்துழைப்பு வழங்கியிருந்த இலங்கை ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் அமைச் சர்கள், நாடாளுமன்ற உறுப்பி னர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

இந்தத் தேர்தல் முடிவுகளால் துவண்டுவிடாது மக்களுக்கான எமது அனைத்துப் பணிகளும் தொடரும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## புலம்பெயர்ந்தவர் தேசத்தில்...

# 'விஸ்வ சேது' அமைப்பின் அனுபவப் பகிர்வு

(டென்மார்க்)



விஸ்வ சேது என்ற அமைப் பின் ஊடாக கலாநிதி ஜீவகுமாரன் (டென்மார்க்) பல தமிழ்ப் புத்தகங்களை பதிப்பித்து அவற்றை இலங்கையில் தமிழ்பேசும் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கும், நூலகங்களுக்கும் இலவசமாக அளித்துள்ளார். இது பற்றி எதிர்வரும் வியாழக்கிழாமை 28ஆம் திகதி அன்று இலண்டன் நேரம் இரவு 8 மணிக்கு தீபம் தொலைக்காட்சியில் நேயர்களுடன் நேரடி ஒளிபரப்பில் தனது அனுபவங்கள் பகிர்ந்து கொள்கிறார்.

முகங்கள் (புலம்பெயர் வாழ்வு பற்றிய 50 ஆசிரியர்களின் சிறுகதைத் தொகுப்பு), இப்படிக்கு அன்புள்ள அம்மா (திருமதி. கலாநிதி ஜீவகுமாரனால் டெனிஸ் மொழியில் Kærlig hilsen mor என்ற பெயரில் எழுதப்பட்டு ஜீவகுமாரனால் மொழி பெயர்க்கப்பட்ட உரை நடைக் காவியம்), கடவுளின் நிலம் (அனஸ் என அறியப்படும் இளைய அப்துல்லாஹ்வின் பத்தி எழுத்துகளின் தொகுப்பு), தேடலே வாழ்க்கையாய் (நூல் தேட்டம் என். செல்வராஜாவின் கட்டுரைகளின் தொகுப்பு), நீ மிதமாக நான் மிகையாக. நான் சொல்வதெல்லாம் (இவள் பாரதியின் 2 கவிதைத் தொகுப்புகள்), சூரியப் பொழுதுகள் (அவுஸ்திரேலியாவில் வாழும் பேராசிரியர் மணிவண்ணனின் கவிதைத் தொகுப்பு) ஆகிய புத்தகங்கள் இவ் வமைப்பால் கடந்த ஏப்பிரல் மாதம் கொழும்பு தமிழச்சங்கத்தில் வெளியீட்டு அறிமுகவிழா நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்ப் பாமாலை நூல் வெளியீட்டு விழா

(இலண்டன்)

இலண்டன் திருமுருகன் இன் தமிழ்ப்பாமாலை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 31.ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய தேர்த் திருவிழாவில் வைத்து வெளியீடு செய்யப்படவுள்ளது.

இலண்டன் திருமுருகனைப் போற்றும் பிள்ளைக்கவி மற்றும் திருவூஞ்சல் அடங்கிய இந் நூலை நீர்வை.தி.மயூரகிரி சர்மா அவர்கள் எழுதியிருக்கிறார்.

இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய அறங்காவலரும் நீர்வேலியைச் சேர்ந்தவருமாகிய இராஜதுரை அன்பானந்தர் அவர்கள் இந் நூலை வெளியிடு கிறார்கள்.

இந்நூலுக்கு இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய பிரதம சிவாச்சார்யார் சிவஸ்ரீ. கைலை. நாகநாதசிவம் குருக்கள் சிறப்பு ஆசியுரை வழங்கியிருக்கிறமையும் குறிப்பிடத்தக்கதாகும்.


# முருகவேள் வித்தியாலயத்தில் புதிய ஆய்வுகூட ந் திறப்பு



யாழ்.எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடமும் வகுப்பறை கட்டடமும் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக போக்குவரத்து பிரதி அமைச்சர் கௌரவ ரோகன திசநாயக்க கலந்துகொண்டார். பாடசாலை அதிபர், தீவகக் கல்விப் பணிப்பாளர் எ.ராதாகிருஷ்ணன்,கோட்டக்கல்விப் பணிப் பாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.


## செய்திப்பரணம்

**தமிழனுக்கு மறுமலர்ச்சி துளிதானும் வேண்டாமாம்**
**இமிழ்திரை உலகமே இதைத்தான் - அமிழ்ந்திடும்**
**உள்ளூராட்சி தேர்தலால் உணர்த்திக் கொண்டிருக்கும்**
**உள்ளிதான் வெள்ளைப்பூ டுணர்!**



# சிறைக் கைதி பொன்சேகாவிற்கு அதிக சுதந்திரம் வழங்கியது யார்?

## அஸ்வர் எம்.பி. சீற்றம்



(கிளிநொச்சி)

சிறைவாசம் அனுபவிக்கும் கைதியான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஊடகங்களுக்குக் கருத்துக்கூற எவ்வாறு அனுமதிக்கப்பட்டு வருகிறார்? என வெள்ளியன்று பாராளுமன்றத்தில் ஏ.எச்.எம். அஸ்வர எம்.பி. கேள்வி எழுப்பினார்.

சிறைச்சாலைகள் சட்டத்தின் 68ஆவது சரத்தின் பிரகாரம் தண்டனைக் கைதியொருவர் ஊடகங்களுக்குக் கருத்துக்கூற முடியாது. ஆனால் சரத் பொன்சேகாதனியார் வைத்தியசாலைக்கும், நீதிமன்றத்திற்கும் வரும் போதும், திரும்பிச் செல்லும் போதும் ஊடகங்களுக்கு சுதந்திரமாகக் கருத்துத் தெரிவித்து வருகிறார். அத்துடன் கையை உயர்த்திக் காட்டிக்காட்டி அவர் தொலைக காட்சிகளுக்கு கருத்துக் கூறிவருவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

சரத் பொன்சேகா இவ்வாறு நடந்துகொள்ள அனுமதி வழங்கியது யார்? என்றும் அஸ்வர் எம்.பி. நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். எனவே இவ்விடயத்தில் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு இதனைத் தடுத்து நிறுத்தவேண்டும். நீதியமைச்சும் இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அஸ்வர் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறைச்சாலையிலுள்ள தண்டனை பெற்ற சிறைக்கைதியான சரத் பொன்சேகா இவ்வளவு சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கக்கூடாது. அதற்கு சிறைச்சாலை நிர்வாகம் அனுமதிப்பது தவறு. அதனை நிர்வாகம் தடுக்க வேண்டும். அதனையும் மீறி சரத் பொன்சேகா கருத்துக் கூறினால் பொன்சேகாவிற்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுத்து வழககுத் தாக்கல் செய்யவேண்டும் எனவும் அஸ்வர் எம்.பி சபையில் தெரிவித்தார்.

# மனிதாபிமான நடைபயணம் உரிய இலக்கை விரைவில் எட்டும்



(யாழ்ப்பாணம்)

இருநூறு மில்லியன் ரூபாவை இலக்காகக் கொண்டு (பாதை) எனும் நடைபயணத்தில் பயண அணியினர் 127 மில்லியன் ரூபாய்களை சேர்த்து "கலர் ஒவ் கறேஞ்" நம்பிக்கை நிறுவனத்தின் இயக்குநர்கள் நேற்று யாழ்.சென் ஜோன்ஸ் அன்புலன்ஸ் நிறுவனத்தின் மண்டபத்தில் பத்திரிகையாளரைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் டாக்டர் ஏ.கேதீஸ்வரன், பாதை ஏற்பாட்டாளர், தி.கே.குலரஞ்சன், கலர் ஒவ் கறேஞ் பணிப்பாளர், நாதன் கணநாதன், பிரதாக நிறைவேற்று அதிகாரி சரிந்த உணவம்புவ நடைபாதை அணியினரும் கலந்துகொண்டனர்.

இதில் நம்பிக்கை நிறுவனத்தின் இலங்கையில் உள்ள புற்றுநோய் நோயாளர்களின் தேவைகளை வளங்களைப் மேம்படுத்துவதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ளது.

இது 2008 ஆம் ஆண்டு இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம் பிரபல வியாபார நிறுவனங்களின் உயர் அதிகாரிகளை இயக்குனர்களாக நியமித்துள்ளது.

புற்றுநோய் தீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்றை மேம்படுத்தும் நோக்கில் இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இரண்டு மில்லியன் டொலர் மதிப்புள்ள தொடர் திட்டங்களை வகுத்தல்கள் காரணமாக இத்திட்டத்தில் புற்றுநோய் பாதிப்பிற்குள்ளான சிறுவர்களுக்கான அதி கவனிப்புப் பிரிவு மற்றும் கதிர் வீச்சுச் சிகிச்சைப் பிரிவு உள்ளடக்கப்படுகின்றது.

இதற்காக நிதி திரட்டும் நோக்கில் பாதை எனும் நீண்ட தூர நடைபயணத்தை மாத்தளையிலிருந்து கிட்டத்தட்ட 600 கிலோ மீற்றர் தூரத்தினைக்கடந்த நிலையில் இன்றும் 60 கிலோ மீற்றர் தூரத்தினை 3 நாட்கள் நடந்த விக்கும் இத் தொடரில் அணியில் 15 பேர் தொடர்ந்து நடைபெற்ற பாதை மேற்கொள்ள விருக்கின்றனர்.

இத் தொடர் அணிக்கு தைரியம் ஊட்டும் வகையில் 22000 பேருக்கு மேலான மக்கள் கலந்து கொண்டார்கள்.

மக்கள் இந்த நடை பயணத்திற்கு ஆதரவையும், வரவேற்புக்களையும் அதிகரித்திருக்கின்றனர்கள். இந்த நடை பயண்தில் கிரிக்கெட் வீரகளையும் மகேல ஜயவர்த்தன, கெல்சன், குமார் சங்ககார, அஞ்சலோ இப்பயணத்தில் கலந்துகொணடார்கள்.

இது வடபகுதி பிள்ளைகளுக்காகத் தாம் போடும் பெரும்நடை. இந்நடை பயணத்தின்போது வழி நெடுகிலும், ஆதரவும் நம்பிக்கையும் அளித்த மக்களுக்கும், முப்படையினரக்கும், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்த பொலிஸாருக்கும், அனைத்துப் பத்திரிகைகளுக்கும், இலத்திரனியல் ஊடகங்களுக்கும், நடைபயணத்தின் போது அனுசரணை தந்த நிறுவனங்களுக்கும், யாழ்.சென். யோன்ஸ் அம்புலன்ஸ் சேவையினருக்கும் கலர் ஒப்ப சறேஞ். நிறுவனம் தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டது.

நேற்றுக் கொடிகாமத்தில் ஆரம்பித்த நடை பயணம் யாழ்.போதனா வைத்தியசாலைத் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இன்று முடிவடையும். பின்னர், 26ஆம் திகதி ஆரம்பிக்கும் இப்பயணம் வல்லை வெளிவரை சென்று 27 ஆம் திகதி பருத்தித்துறை வெளிச்ச வீட்டுடன் 685 கிலோ மீற்றர் நடைபயணம் நிறைவு பெறும்.

27 ஆம் திகதி 11 மணி முதல் 1 மணி வரை நடைபயணத்தில் காலந்துகொண்ட உறுப்பினர்களுக கான கௌரவிப்பு விழாவும், பாராட்டு விழாவும் நடைபெறும் (எஸ்)

**வடக்கின் தேர்தல் முடிவு...**

தமிழ் மக்கள் தம் பக்கம் என்று காட்டுவதற்காகப் பெரும் பாடுபட்டது.

ஆனால், ஆசை வார்த்தை களையும், அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பெரும் வெற்றிபெறச் செய்துள்ளனர். அரசையும், அதன் தரப்பினரையும் படு தோல்வி அடையச் செய்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு இணைந்த தமது தாயகத்தில் சகல அதிகாரங்களுடன் கூடிய அரசியல் சுயாட்சி வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாக உள்ளது. எந்த சலுகைகளுக்காவும் அச்சுறுத் தல்களுக்காகவும் தங்கள் அரசியல் அபிலாசையை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெற செய்ததன் மூலம் மீண்டும் ஒரு முறை பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் இந்தத் தீர்ப்புக்கு மதிப்பளித்து இலங்கை அரசு சர்வதேச விசாரணையை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுககொள்கின்றது. தமிழ் மக்கள் தமது தாயகத்தில் கௌரவமாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதற்கு ஏற்ற அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ளும் வகையில் இலங்கை அரசைச் சர்வதேச சமூகம் தொடர்ந்தும் வற்புறுத்த வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக் கொள்கிறது. எமது வேண்டுகோளை ஏற்றுப் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியிலும் வாக்குச் சாவடிகளுக்குச் சாரி சாரியாகச் சென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதை ஒரு தேசியக் கடமையாக நிறைவேற்றி வைத்த தமிழ் மக்களுக்குக் கூட்டமைப்பு தனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆடி பிறந்தும் ஆறாத வெப்பம்

ஆடியில் மழை பொழியும் என்று சொல்லுவார்கள். இம் முறை ஆடி மாதம் பிறந்து ஒரு வாரமாகியும் கொஞ்சமும் வெப்பம் தணியவில்லை. இதனால் விவசாயப்பெருமக்கள் உள்ளிட்ட யாழ் மக்கள் அனைவரும் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

நிலத்திலிருந்தும் ஆகாயத்திலிருந்தும் எழுகிற சூடு கடுமையாக இருக்கிறது. இப்போதெல்லாம் விடிகாலை வேளையில் இதோ மழை பொழியப் போகிறது என்கிற வகையில் கரு மேகங்கள் கூடியிருக்கிற சூழல் காணப்பட்டாலும் அது நேரம் செல்லச்செல்ல கலைந்து போய் விடுகிறது.

பல நாள் பசித்திருந்தவர்க்கு வாயருகில் உணவைக் கொண்டு சென்று, தட்டி விடுவது போல இப்படி வானத்தைப் பார்த்துக் காத்துக் கிடக்கும், விவசாயிகள் மழையை தட்டிச் சென்றுவிடும் காற்றினைக் கண்டு கலங்கி நிற்கிறார்கள்.

# தெல்லிப்பளையில் புதிய கதிர்வீச்சு சிகிச்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளையில் எதிர்வரும் 27 ஆம் திகதி, மாலை 4 மணி முதல் 6 மணிவரை நடைபெறவுள்ள குறுந்தூர கதிர் வீச்சுச் சிகிச்சை நிலையத்திற்கு அடிக்கல் நாட்டுவிழா நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சமூகமளிக்கும் ஒவ்வொருவரும் பணம் கொடுத்து வாங்கும் செங்கல் ஒவ்வொன்றிற்கும் அவர்களுடைய பெயர் பொறிக்கப்பட்டு இந்த புற்றுநோய் சிகிச்சை நிலையம் கட்டப்படும் என கலர் ஒவ் கறேஞ் நிறுவனத்தினர் தெரிவித்துக் கொண்டனர். (எஸ்)

# பொலிஸார் - மக்கள் முறுகல் டயகம பிரதேசத்தில் பதற்றம்



டயகம பிரதேசத்தில் முச்சக்கரவண்டிச் சாரதியொருவர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதனால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டுள்ளதுடன் பொலிஸாரின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்கள் ஆரப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் பொலிஸாரின் வாகனங்களையும் சேதப் படுத்தியுள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தை அடுத்து டயகமவை அண்மித்த பொலிஸ் நிலையங்களிலிருந்தும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அப்பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து நிலைமையினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

சம்பவத்தில் பொலிஸாரால் தாக்கப்பட்ட முச்சக்கர வண்டியின் சாரதி சிகிச்சைகளுக்காக டயகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

**வடக்கில் தேர்தல் வன்முறை...**

படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். இதனை மக்கள் விரைவில் உணர்ந்து கொள்வார்கள்.

இத்தேர்தல் முடிவுகளின் படி அரசாங்கத்தை மக்கள் நிராகரித்ததாக நாங்கள் எடுக்க முடியாது. அரசாங்கம் வடபகுதி மக்களுக்கு அண்மையில் செய்த உதவிகள் மற்றும் நல்லெண்ண நடவடிக்கைகள் மக்களுக்குச் சரியாகச் சொல்லப்படவில்லை. தவறாக சொல்லப்பட்டிருக்கின்றது.

இனவாதம், மொழிவாதம் இவற்றையெல்லாம் மூடி மறைத்திருக்கின்றது. இதனை துரதிஷ்டமாக எங்களது தமிழ் ஊடகங்கள் சரியாக மக்களுக்க எடுத்துச் சொல்லவில்லை எனவும் பதிலளித்தார்.

**ஊடகவியலாளர்...**

மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடத் தொகுதியில் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தமக்கு இடம் ஒதுக்கித்தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆர்பாட்டம் நடாத்துவதற்கு கட்டடத்திற்கு அருகில் பலர் ஒன்று கூடினர்.

இந்நிலையில இந்த ஆர்ப் பாட்டம் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற எமது குழுவினர் தமது பணிகளை மேற்கொள்வதற்கு சிலர் இடையூறு விளைவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக கிரிபத்கொட பொலிஸில் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக இது வரை ஆறுபேரிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரிஷாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.